பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்
கொழும்பு

Registered at the G. P. O. as a Newspaper
வாரப்பதிப்பு விலை சதம் 15

# ஈழநாடு

மலர் 7 | EELA NADU | இதழ் 296
தேசிய தினசரி | National Tamil Daily

விசுவாவசு கார். 20 டிசம்பர் 11 (5-12-65) ஞாயிற்றுக்கிழமை

## 'பென்ஸ்' சுவீப்

யாழ்ப்பாணத்தில் இழுக்கப்படும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

எழுபதாவது இலக்க தேசிய சுவீப் யாழ்ப்பாணத்தில் இழுக்கப்படவிருக்கிறது. டிசம்பர் மாதம் முப்பதாந்திகதி இழுக்கப்படும்.

இந்த சுவீப்பில் முதற் பரிசு ஒரு 'பென்ஸ்' காரும் ஐம்பதினாயிரம் ரூபாவும் அல்லது ஒரு லட்சம் ரூபா ரொக்கப் பணம் கொடுக்கப்படும்.

# சதி வழக்கு எதிரிகள் விடுதலை பெற்றனர்

## சுதந்திரப் பறவைகளாக வெளியே வந்தனர்

— நமது நிருபர் —

கொழும்பு, சனி

இலங்கை அரசாங்கத்தைக் கவிழ்க்க சதிசெய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு இலங்கை உயர் நீதிமன்றத்தினால் குற்றவாளிகளாகக் காணப்பட்டு மூன்று வருடங்கள் பத்து மாதங்கள் ஆறுநாட்கள் வரை வெளி உலகத்தினுள் பிரவேசிக்காது 'கூண்டுக்கிளிகளா'க சிறையில் அடைபட்டுக் கிடந்த பதினொரு பேரும் இன்று பகல் இரண்டு மணிக்கு சுதந்திரப் பறவைகளாக வெளியே வந்தனர்.

பிரிவுக் கவுன்ஸிலிலிருந்து "விடுதலை" உத்தரவு வந்து விட்டதாக பிரதம ஜெயிலர் இன்று பகல் இரண்டு மணிக்கு சதிவழக்கு பிரதிவாதிகளிடம் தெரிவித்திருந்த போதும் "கிறிஸ்மஸ்" தின விழாவை அவர்கள் உடனேயே கொண்டாடி விட்ட மகிழ்ச்சி அவர்களின் முகத்தில் பிரதிபலித்தது!

### ஜனத்திரள்

வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு முன்னர் இன்று ஒரே ஜனக்கூட்டமாக விருந்தது. கார்கள் ஒருபுறமாக நின்று கொண்டிருந்தன. மறுபுறம் சைக்கிள்களில் பலர் நின்று கொண்டிருந்தனர். இதற்கிடையே இளம் பெண்களும், வயது வந்த மகளிரும் ஆடவரும் அந்த இடத்தையே ஆக்கிரமித்துக் கொண்டிருந்தனர். இன்று காலை சதிவழக்கு எதிரிகள் விடுவிக்கப்படுவார்கள் என்று வெளியான செய்தி இங்கு காட்டுத் தீ போல பரவிவிட்டது. காலை எட்டு மணியிலிருந்தே மக்கள் இங்கு கூட ஆரம்பித்து விட்டனர் மதிய உணவைக் கூட மறந்து பலர் கால் கடுக்க நின்றுகொண்டிருந்தனர்.

### அந்த இரண்டு மணி

சரியாக பகல் இரண்டுமணி ஐந்து நிமிடங்கள் இருக்கும். ஜனத்திரளிடையே ஒரு பரபரப்பு ஏற்பட்டது. "எல்லோரும் விடுதலை செய்யப்பட்டுவிட்டனர்" என்று அங்கு செய்தி அடிபடத்தொடங்கியது. "அப்பாடா..." என்ற திருப்தி எல்லோரிடையேயும் ஏற்பட்டது. விடுதலையான அந்த பதினொரு பேரையும் காண்பதற்காக பலர் விழுந்தடித்துக்கொண்டு முன்வந்துகொண்டிருந்தனர். ஆனால் அங்கிருந்த பொலிஸார் அவர்களைத் தடுத்துக்கொண்டிருந்தனர்.

### வெளியே வந்தனர்

சில நிமிடங்கள் மறைந்திருக்கும்... வெற்றிப்புன்னகை முகத்தில் தழுவிக்கொண்டிருக்க... அந்த பதினொருபேரும் ஒருவித (வீறு) நடை போட்டுக் கொண்டு கைகளை உல்லாசமாக வீசிக்கொண்டு வெளியேவந்தனர். சிறைச்சாலைக்கதவை விட்டு வெளியே அவர்கள் வந்ததுதான் தாமதம்; அங்கு காத்துக் கொண்டிருந்த மங்கையர்கள் சிலர் தங்களது கணவன்மாரை அன்புடன் வாரி அணைத்து முத்தமிட்டனர். குழந்தைகள் தங்களது தந்தைக்கு "டடி..." என்று கூறிக் கொண்டு முத்தம் கொடுத்த காட்சி பார்ப்போர் மனதை உருக்குவதாகவிருந்தது. அங்கு சில நிமிடங்கள் நின்றபின்னர் இவர்கள் கார்களில் தங்களது இல்லங்கள் நோக்கி சென்றனர்.

### ஒரே கோலாகலம்

விடுதலைபெற்றவர்களின் இல்லங்கள் இன்று ஒரே கோலாகலமாகவிருந்தன. பட்டாசு வெடிகள் பல வீடுகளில் எதிரொலித்தன. நேற்றிரவு பலரது வீடுகளிலும் விசேஷ விருந்து வைபவங்கள் நடைபெற்றன. நண்பர்களும் உறவினர்களும் இங்கு நிறைந்திருந்தனர்.

---

## ஜி. ஜி. க்கு பாராட்டு

### பெரும் வரவேற்பளிக்கவும் ஏற்பாடு

கொழும்பு, சனி

விடுதலைபெற்ற பதினொரு பேரும் தங்களின் முதல் நடவடிக்கையாக திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கியூ. ஸி. க்கு தங்களது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்கள்.

பதினொருபேரும் கையெழுத்திட்டு நன்றிபாராட்டும் ஒரு தந்தியை திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்துக்கு அனுப்புவதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தற்சமயம் எங்கிருக்கின்றார் என்று அறிவதில் அவர்கள் கவனம் செலுத்திக்கொண்டிருந்தனர்.

திரு. ஜி. ஜி பொன்னம்பலம் இலங்கை திரும்பும் பொழுது அவருக்கு மகத்தான வரவேற்பளிக்கவும் இவர்கள் முடிவு செய்துள்ளனர்.

---

மயிலிட்டி குடியேற்றத் திட்டம்

## வீடுகளிலிருந்து மக்கள் வெளியேறினர்

### கடும் மழையினால் 40 வீடுகள் பாதிப்பு

மாவிட்டபுரம், சனி

கடும் மழையினாலும் அதனைத்தொடர்ந்து ஏற்பட்ட சிறு வெள்ளத்தினாலும் மயிலிட்டி குடியேற்றத் திட்டத்தைச் சேர்ந்த மக்கள் பலர் தங்களது இருப்பிடங்களை விட்டு வெளியேறிவிட்டனர்.

இக்குடியேற்றத் திட்டத்தில் நாற்பது வீடுகளில் தண்ணீர் புகுந்திருக்கிறது. நேற்றுஇக்குடியேற்றவாசிகள் தங்களது இருப்பிடங்களைவிட்டு பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுந்தனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமூக சேவைப்பகுதியினர் பாணும், பணிஸும் வழங்கினர். வேறு நிவாரண உதவிகள் எதுவும் இவர்களுக்கு அளிக்கப்படவில்லை.

வலிகாமம் வடக்கு காரியாதிகாரி, யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர், காங்கேசன்துறை எம். பி. திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஆகியோருக்கு நிவாரண உதவிகள் குறித்து தந்திகள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

மழைதொடர்ந்து பெய்ததால் இப்பகுதியில் வெங்காயச் செய்கை முற்றாக நாசமாகிவிட்டதாக விவசாயிகள் நமது நிருபரிடம் தெரிவித்துள்ளனர்.

---

## "உறவு கெட்டது உண்மையே"

டெஹ்ரான், டிச. 3

அமெரிக்க - பாகிஸ்தான் உறவு சீர் கெட்டிருக்கிறதென்றும், மேலும் சீர் கெடுவதைத் தடுக்கவே ஜனாதிபதி அயூப் அமெரிக்கா செல்லவிருக்கிறார் என்றும் திரு. பூட்டோ இங்கு கூறினார்.

---

## விற்பனவு இலாகாவிடம் நேரடியாக விற்க வசதி

### தண்ணீரூற்றில் திட்டம் அங்குரார்ப்பணம்

வவனியா, சனி

விவசாயிகளிடமிருந்து உள்ளூர் விளைபொருள்களை, விற்பனை இலாகா நேரடியாக விலைக்குப் பெற்றுக் கொள்ளும் திட்டம் இன்று காலை தண்ணீரூற்றுச் சந்தையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. இதனை வவனியா எம் பி. திரு. ரி. சிவசிதம்பரம் தொடக்கிவைத்தார்.

இத்திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்து வவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் பேசுகையில் உள்ளூரில் விளைந்த உணவுப் பொருள்களை விற்பனை இலாகா நேரடியாக விலைக்குவாங்குவதன் மூலம் இப்பகுதி விவசாயிகளது தொல்லை நீங்கி விட்டது என்று கூறினார்.

உள்ளூரில் விளைந்த பொருள்களை எல்லோரிடமும் சரியான விலைக்கு விற்பனவு இலாகா வாங்குவதன் மூலம் விவசாயிகள் பாரபட்சமின்றி உணவுப்பொருள்களை

(10-ம் பக்கம் பார்க்க)



தரம் பெற
கண் பரிசோதகர்
அனஸ்கோ,
12, மெயின் வீதி, யாழ்ப்பாணம்
(நூதனசாலைக்கு முன்பாக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரசிக நோக்கு

# ஆறியகற்பு; சீறியகற்பு

— பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

**19** கட்டுரைகள்; இலக்கிய ஆய்வு. பிரசித்திபெற்ற கம்பராமாயணம் பொதுவாகவும் சிலப்பதிகாரம் சிறப்பாகவும் ஆராயப்பட்டிருக்கின்றன. சீதையின் கற்பு அறக்கற்பு என்று சிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. இலக்குமணனின் திறம்பட்ட நிலையை எடுத்துக்காட்டிய விதம் மெச்சற்பாலது. 'என்னயல் நிற்றியோ இளையோய்' என்ற பிராட்டியின் கூற்றை விபரீதம் பயவாது ஆண்டமுறை இனிமைதருகின்றது. குகன், சடாயு, மாருதி என்ற பாத்திரங்களை அப்படியே ஆசிரியர் நம்முன்னிலையில் நிறுத்தியிருக்கின்றார். ''பிறப்பறுக்கலுற்றார்க் குடம்புமிகை'' என்பது சாந்த நிலையில் சரபங்க தம்பதிகள்பால் மிளிர்கின்றது. கதாநாயகனை ஸ்ரீராமனது அறத்தாற்றினைப் பல்லாற்றானுஞ் சிறப்பித்த ஆசிரியர் வாலிவதத்தில் அவன்பாலேற்றும் வசைக்குத் தீர்வுகாணுகின்றார்.

'தருமம் குடியிருக்கும் இடம் இராமபாணத்தின் நுதி' என்கின்றான் வாலி. 'தென்னவன் தீதிலன்' என்கின்றாள் தெய்வக்கண்ணகி. இங்ஙனமாயபோதும் உலகம் இராமனுக்கும் பாண்டியனுக்கும் வசைபாடிக்கொண்டேயிருக்கின்றது. இவ்விஷயத்தில் இளங்கோவையும் கம்பரையும் எதிர்முகம் பண்ணி, அவர்களின் விருப்புவெறுப்புக்களை விசாரஞ் செய்து, இருவர் உளச்சுவை பற்றியும் ஆழமானதோர் ஆய்வுநடாத்தவேண்டும் போலும். இது நிற்க,

சிலப்பதிகார ஆய்வு சீறிய கற்பில் தொடங்குகின்றது. சீதையின் கற்பு அறக்கற்பு. அஃதாவது ஆறிய கற்பு. கண்ணகியின் கற்பு மறக்கற்பு; அஃதாவது சீறிய கற்பு. இவ்வாறாய வழக்குப் பற்றிக் கண்ணகி கற்பு இங்கே சீறிய கற்பு என்று மொழியப்பட்டது.

திருக்கைலையை எடுத்த திண்டிறல் வேந்தனான இராவணனைத் 'துரும்பு இது தெரியக்கேட்டி' என்று கனன்று சீறி எழுந்தவள் சீதை. சீதையின் சீற்றத் தோடொப்பிடுதற்குக் கண்ணகியின் சீற்றம் எம்மாத்திரம்! இங்ஙனமாய போதும் கண்ணகி சீறிய கற்பினள் ஆயினள்.

கண்ணகி சீற்றத்துக்கு அமைதி கூறிக் கோவலன் போக்குக்கும் ஒருவாறு மன்னிப்புச் செய்து, எடுத்துக்கொண்ட துன்பியல் நாடகத்தை இடைக்காட்சிகளை ஏற்றவாறு பொருத்தி அமைத்து அவ்வாற்றால் மேலைத்தேசத்துப் புலவரும் எட்டிப்பார்க்கும் வகையில் இளங்கோவடிகளின் புலமை விறிட்டெழுவதை எடுத்துக் காட்டிய விதம், தமிழ்இலக்கிய உலகு இறும்பூதெய்தற்குரியதாம்.

இளங்கோவடிகளின் புலமை மேலைத்தேச முறையில் ஆயும் ஆய்வுக்கு எடை விடாதுயர்ந்து மிக்கதாயினும், கிழக்குத்தேச முறையில் ஆயவும் இடம் உண்டு என்பது படவும் கதாநாயகரின் நிறையுடன் குறையும் காட்டப்பட்டிருப்பது போற்றத்தக்கதாம்.

கிழக்குத் தேசத்திலே புலவன் நுகர்ச்சியே உலகநுகர்ச்சியாம். ஆதலின், புலவன் பாத்திரங்களை ஆளும்போது தருமம் என்ற இரேகையை உணர்ந்து, அதில்தான் விலகாமல் நின்று கொண்டே பாத்திரங்களின் இன்ப துன்பங்களை எடுத்துக்காட்டற்பாலன. இளங்கோ இவ்விஷயத்தில் எவ்வளவுதூரம் வென்றியெய்தினாரென்பது,

அவரெடுத்த பாத்திரங்களுட் சிறந்த கண்ணகியை எறிபத்தரோடும்,

கோவலனை, திருவிளையாடலில் வரும் பிராமணி ஒருத்தியை எய்துகொன்றானென்று குற்றஞ்சாட்டப்பட்ட வேடனோடும்,

பழிக்கஞ்சி உயிர்நீத்த பாண்டியனை, அவ்வாறு உயிர்நீத்த புகழ்ச்சோழ நாயனாரோடும் ஒப்பிட்டு ஆய்வு நடத்தித் தெளியற்பாலதாம்.

மேலும் மாதவி பரத்தையா? வரைவின் மகளா? என்பது விடுவிக்கப்படல் வேண்டும். பரத்தையாயின் காதலன் முன்னிலையில் மற்றோர் குறிப்பிற் பாடினாளென்பது தமிழ்ப்பொருண் மரபுக்குக் கழிபேரிழுக்காம்.

மிகுதியாய இலக்கண ஆய்வுகளில் இறுதி இரு கட்டுரையும், நூலாசிரியர் நுதலிய பொருளை விலகி உரையாசிரியர்கள் நடப்பதற்கு நல்ல உதாரணங்கள். பேரறிஞர் ஒருவர் 'சங்கரர் தமது கருத்தை நிறுவுதற்குப் பிரம சூத்திரம் ஏனோ' என்றார்.

இரட்டை உயிர், சிறுபொழுது என்ற கட்டுரைகள் தமதாற்றலால் புதுமதம்கட்டி நடாத்தற்குதாரணம் ஆகலாம். அவை மேலும் ஆய்வுக் குரியவாம்.

ஒன்பது+பத்து தொண்ணூறுகுமா? என்ற ஆட்சேபம் பொருத்தமானதே. நியாயலக்கணம் செய்தோரான வட்டுக்கோட்டை முத்துக்குமாரர் சிதம்பரப்பிள்ளை என்பவரும் முன் ஆட்சேபஞ்செய்திருக்கின்றார்.

முப்பாலும் நான்மறையும் என்ற விஷயம், அவையிரண்டும் நுதலிய பொருளைத் தெளிவுசெய்தபிறகே ஆராயற்பாலதாம் போலும்.

திருமூலநாயனாரின் உடல் மாற்றம் பற்றிய ஐயம் எட்டாதது. கண்ணகி மேலுலகு சென்றதும், கோவலன் உயிர்பெற்றெழுந்து உரையாடியதும் போல நமக்கு எட்டாததாம். யோகாசனம் சிந்தனைக்குரியதே.

மோரியர் யார்? யவனர் சோனகரா? என்ற வரலாற்று விஷயங்கள் புடைபட ஆராய்தற்பாலனவேயாம். ஆராயப்பட்டிருக்கின்றன.

ஒருவாறு இலக்கியவிலக்கண ஆய்வுரைகள் நீண்டடப்பட்டன. ஆழ்ந்து தனித்தனி நோக்கவேண்டியவை அவை.

நூலில் ஆண்ட கருத்துக்கள் இகளரவமானவை. கருத்துக்களை ஆண்ட நடை பிரபுத்துவமானவை.

சிந்தனையாளர்களின் வார்த்தைகள் கருத்தோவியங்கள். அவைகள் சிந்திப்பார்க்குத் தெவிட்டாத அருமருந்தாம்.

திரு. த. இராமநாதபிள்ளை, விரல்மடித்தெண்ணத்தக்க சிலரினுஞ்சிலராய சிந்தனையாளர்களில் ஒருவர். மேலைத் தேசத்துச் சிறந்த சிந்தனையாளர்களாகிய கிரேக்க நாட்டறிஞர்களின் நூல்களிலும், கிழக்குத்தேச ஞானிகளின் நூல்களிலும் மூழ்கித் திளைத்தவர் இராமநாதபிள்ளை. இவருடைய செவிகள் புற்றீசல் போலெழுந்து மடிந்து போகின்ற நிலையற்ற கருத்துக்களிற் பயிலாதவை. இது நிற்க.

இராமநாதபிள்ளை காலந்தோறும் தம்பால் உதித்த சிறந்தசிந்தனைகளைப் புத்தக வாயிலாக அன்றித் தமிழ்ப் பொழில் என்கின்ற பத்திரிகை வாயிலாகவும் வெளிப்படுத்தியிருக்கின்றார். தமிழ்ப் பொழிலில் வந்த 30 கட்டுரைகளை இப்பொழுது புத்தக உருவில் பார்க்கிறோம்.

[உயர்சைவத்திருவாளரும், புலோலி இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபருமான திரு. த. இராமநாதபிள்ளை அவர்களால் எழுதப்பெற்ற ''இலக்கிய இலக்கண ஆய்வுரைகள்'' நூல் வெளியீட்டு விழாவுக்குப் பண்டித [illegible] அனுப்பி வைத்த நயவுரை.]




**குறிஞ்சிப்பூ:** (கவிதைத் தொகுப்பு); தொகுப்பாசிரியர்: ஈழக்குமார். முகவரி: கவிதா நிலையம், 293, பேராதனை வீதி, கண்டி. விலை: ரூ. 1-75.

உள்ளத்துடிப்பும், உயரிய ஆர்வமுங்கொண்ட இளங் கவிஞர்களின் பலதிறப்பட்ட பாடல்களைக்கொண்டது இப்பாத் தொகுப்பு. வீரப்பாட்டும், விடுதலைப்பாட்டும், காதற்பாட்டும், கதைப்பாட்டும் இன்னோரன்ன பிறவகைப் பாக்களும் இத்தொகுப்பில் நிறைந்திருக்கின்றனெதனினும், மலையக அன்னையின் மாண்பையும், அவள்தம் புதல்வரின் அவதி நிறைந்த வாழ்வையும் பிரதிபலிக்கும் பாடல்கள்தாம் ''குறிஞ்சிப்பூ'வின் பெரும் பகுதியை ஆக்கிரமிக்கின்றன. 'குறிஞ்சிப்பூ'வுக்கு இதழ் சேர்த்திருக்கும் இளங் கவிஞர்கள் கூடப் பெரும்பாலும் மலையகத்தினரே.

ஆட்சியாளரின் அர்த்தமற்ற சட்டங்கள் அல்லது கட்டுப்பாடுகளினால் அவதியுறும் மலையக மக்களின் உணர்ச்சிக் கொந்தளிப்புகளை அப்படியே கவிதையாக வடித்திருக்கின்றனர் கவிஞர்கள் இத்தொகுப்பில்!

''ஊனையும் உடலையும்
ஊட்டி இம் மண்ணை
உயிர்த்தவர்க் கிங்கே
உளங்கனிந்தன்பு
பூணுவாரில்லை (அவர்)
புதை மேட்டிலோர்
கானகப்
பூவைப் பறித்தும் போடு
வாரில்லையே...''

என்றுகவிஞர் ஸி.வி.வேலுப்பிள்ளையின் ஆங்கிலப் பாடலை சக்தி அ. பாலையா தமிழாக்கிப் பாடும்போதும்,

[மதிப்புரை வேண்டுவோர் ஒவ்வொரு புத்தகத்திலும் இரு பிரதிகள் அனுப்ப வேண்டும்.]

''மலை போன்ற பொருள்
குவித்தும் வாழ்வு
நொந்தும்
மடுப்போன்ற பள்ளத்
தில் வீழ்ந்திருப்போர்
உலை வாயில் கசிந்துருகும்
இரும்பைப்போல
உளம் நொந்து வாழ்வற்
றோர் பிரஜைகளா?''

என்று கவிஞர் பெரியசாமியின் அடிகளிலும், இன்னும் பலவிடங்களிலும் மலையக அன்னையின் மனதில் மண்டியிருக்கும் சோகத்தின் பிரதிபலிப்பைக் காணமுடிகிறது.

''வரிசையாய்த் துளிர்த்
துள்ள தேயிலைபோல
மங்கையரின் எழிற்
கூட்டம் கூடையோடு
விரிகதிரின் ஒளிவிசையாய்
மலையிலேறி
விரைவதோ இணையி
லாக் கடமை
யோட்டம்''

என்று கவிஞர் 'ஈழக்குமார்' பாடும்போது மலையகச் சித்திரம் நம் கண்ணெதிரே மிளிர்கின்றது.

கிறிஸ்டினா றோசெட்டியின் ''when I am dead my dearest'' என்ற ஆங்கிலக் கவிதையின் மூலச்சுவை இம்மியளவும் குன்றாத சு. ராமச்சந்திரனின் ''சாவணைத்த போதினிலே என்னன்பே!'' என்ற மொழிபெயர்ப்புக் கவிதை, இக் கவிதையிருக்கும் வரை கவிஞர் ராமச்சந்திரனை வாசகர்கள் மறக்கமாட்டார்கள் என்று சொல்லும்படி அற்புதமாக அமைந்திருக்கிறது.

இன்னும் எளியநடையுடைய இனிய கவிதைகளில் முத்துராசனின் ''கண்ணனும் ராதையும்'', வழுதூர் ஒளி ஏந்தியின் ''நான் செய்த குற்றம்'', வடிவழகனின் ''அடியே'' ஆகியன குறிப்பிடத்தக்கவை.

இத்தொகுப்பு ஈழக்குமாரின் முதல் முயற்சியாயினும் வெற்றிபெற்றுள்ளதென்றே கூறலாம். —பெரி.சண்.

ஃ ஃ ஃ

**நான்கண்டபாரதி** (ஆராய்ச்சிக்கட்டுரைகள்): ஆசிரியர்: நீ. வஸ்தியான் நீக்கொலாஸ், மூதூர். வெளியிட்டோர்: கம்பன்கலைப்பண்ணை மூதூர். விலை: ரூ. 3-75.

பாரதி விழாவில் பேசிய பேச்சு சில இரசிகர்களின் தூண்டுதலாலும் பாரதிமேல் நூலாசிரியர் வைத்த அபிமானத்தாலும் 'நான் கண்ட பாரதி' என்ற நூலாகமலர்ந்துள்ளது. திரு. நீக்கொலாஸின் கன்னிப்படைப்பே ஆராய்ச்சிக்கண்ணோட்டத்துடன் படைக்கப்பட்டுள்ளது. 'நான் கண்ட பாரதி'யில் பாரதியாரின் உள்ளத்தைப் படம் பிடித்துக் காண்பிக்கிறார் ஆசிரியர் நீக்கொலாஸ்.

பாரதத்தாயின் அடிமை விலங்கறுத்துபாரதநாட்டை ஆக்கமுறச்செய்ய முனைந்த பாரதியின் இதயக்குமுறல் ஆசிரியரின் பன்னிரண்டு கட்டுரைகளிலும் பிரதிபலிக்கின்றது. சங்க இலக்கியங்கள், திருக்குறள், கம்பராமாயணம், தமிழ்விடுதூது ஆகியவற்றின் கருத்துக்கள் பொருத்தமான இடங்களில் ஆசிரியரால் பொன்னே போல் போற்றப்படுகின்றன. பாரதியின் உயர்ந்த தெய்வ பக்தியைப் பற்றிக் கூறும்பொழுது திரு நீக்கொலாஸ் பின்வருமாறு கூறுகிறார். ''அவன் கவிதைகளை முற்ற முடியப் படிக்கும் பொழுது அவன் அச்சப்படும் கட்டம் கடவுள் ஒருவருக்கே என்பது நன்கு புலப்படும்.' முடியுடைவேந்தர்கள் ஆட்சி செய்த பொற்காலத்தில் தமிழகத்தில் தமிழறிவுவளம் பெற்றிருந்ததைக் கூறும் ஆசிரியர் 'சந்த வசன கவிதைகள் பாடும் கவிஞர்கள் மலிந்த இந்தக்காலம்போல இருக்கவில்லை அந்தக்காலம். தமிழை வளர்க்கத்திட சங்கற்பம் செய்துகொண்டு பொன்னையும், மணியையும், பரியையும், கரியையும் உவந்து கொடுத்து தமிழை வளர்த்து வந்தபொழுதிலும் தமிழ்த் தாயின்சிறுமையகற்றும் நோக்கமாக, ஆற்றல் குறைவுடன், அறிவுக்குறைவுடன் முன்வரத்துணிந்தகவிஞர்களுக்கு பயங்கரத்தண்டனைகளைக் கொடுத்தும்கூட தமிழைத் தூய்மைசெய்தார்கள்' (பக். 43).

'நமதுகடமைகள்' என்ற கட்டுரையில் தமிழ் இலக்கியத்தில் கவிதை வடிவாகப் பல சிறுகதைகள் இருப்பதை எடுத்துக்காட்டுகிறார். 'அற்புதமும் நற்பண்பும் நன்னெறியும் காட்டவல்ல தண்டமிழ்க் காப்பியங்களில் பொதிந்துள்ள

(5ம் பக்கம் பார்க்க)


## வரி விளம்பரம்

**திருமண அழைப்பு**

சுன்னாகம் திரு. வி. இராசரத்தினம் பிள்ளையினதும் திருமதி இராசரத்தினம் பிள்ளையினதும் மகன் திரு. இ. விசாகேசா (அப்போதிக்கரி, சென்றல்டிஸ்பென்சறி, கிப்பன்கந்த) அவர்களுக்கும், சுன்னாகம் ஆயுள்வேத டாக்டர் ஏ. இளையப்பாவினதும் திருமதி இளையப்பாவினதும் ஏகபுத்திரி செல்வி இ. பரமேஸ்வரி அவர்களுக்கும் 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 8-ந் திகதி காலை 9-00க்கும் 10-30 மணிக்கும் இடையில் மணமகளில்லத்தில் திருமணம் நடைபெறும். 'கொம்பு சந்தி வளவு', சுன்னாகம் 1449

**கல்வி**

1966-ம் வருடத்திற்குரிய ஜி. சி. இ. சாதாரண நிலை கலை / விஞ்ஞானம் / வர்த்தகம், உயர்தரநிலை கலை /விஞ்ஞானம், ஜீ சி. இ. முதல் வருடம், சிங்களம் முதலிய வகுப்புகளுக்கு தற்போது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. தங்க வசதி உண்டு. யுனைட்டெட் இன்ரிரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறைரோட், நல்லூர், யாழ்ப்பாணம். 1440

**வைத்தியம்**

**தொய்வு, கசம், நீரிழிவு**

**கிரந்தி** முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

கண்ணைக் கவரும் டிசைன்களில் தமிழ்-ஆங்கில ''கிறிஸ்மஸ் கார்ட்டுகள்'' எம்மிடம் மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம். S. சவிரிமுத்து, 73, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். 1436

**விற்பனைக்கு**

2 3/4 பரப்பு காணி வீட்டோடும் சகலவசதிகளோடும் யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத்தெருவில் விற்பனைக்கு இருக்கிறது. தேவையானவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். 21, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 1430

பிரம்படி கலட்டியிலுள்ள பயறக்கட்டை என்ற 4 1/2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: சிறீகிருஷ்ணராஜா, 16/9, அம்மன் கோவிலடி, கலட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம் 1417

**சோதிடம்**

சோதிடத் துறையில் நுணுக்கமான கணிப்பு, மாந்திரீகத்தின் துணையுடன். வெற்றிக்கு உத்தரவாதம். விடயங்கள் அனைத்தும் அந்தரங்கமாக வைக்கப்படும். தினமும் பலர் பயனடைகின்றனர். பாராட்டுதல்கள் குவிந்தவண்ணம் இருக்கின்றன. நாட்டின் பிரமுகர்களின் நல்லாதரவைப் பெற்றிருப்பவர். விபரங்களுக்கு பத்துச்சத முத்திரையுடன் தொடர்பு கொள்க:- சோதிடக்கலாநிதி க. வேலுப்பிள்ளை, ''மங்களேஸ்வரீ சோதிட நிலையம்'', திருக்கோணமலை. 1380


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மனிதனிடத்தே தெய்வீகம் ஒளிர காவியம் பாடியவர் கம்பர்

— பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் —

இராமாயண காவியத்தைப்படைத்த கவிச்சக்கரவர்த்தி கம்பனைப் பற்றிப் பல வகையான கதைகள் வழக்கிலிருக்கின்றன. சிவபெருமானின் மறுஅவதாரம் தான் கம்பன்என்றுகேரளத்தில் ஒரு கதை சொல்லப்படுகிறது. கேரளத்தில் ஒருமுறை இராமர் வருவதாக ஏற்பாடாகியிருந்தது. அந்தநேரத்தில் அங்கு வாழ்ந்துகொண்டிருந்த ஒரு காளி இராமரைப் பார்ப்பதற்கு ஆவல் கொண்டாளாம். ஆனல் சிவனே அதை விரும்பவில்லையாம். "உனக்கு இராமரைப் பார்ப்பதற்கான சமயத்தைத்தருவேன்" என்று சிவன் கூறி, பின்னர் தானே கம்பனுகப் பிறந்து, இராமாயணத்தை எழுதியதாக ஒரு கதை. இதே மாதிரி பல கதைகள் பல இடங்களில் வழங்கப்படுகின்றன. இதிலிருந்து ஒன்று மட்டும் எமக்குப் புலப்படுகிறது - பல நாடுகளில் கம்ப இராமாயணம் பரந்து கிடக்கிறது என்ற உண்மை.

கம்ப இராமாயணத்துக்கு என்ன சிறப்பு இருக்கிறது என்பது ஆராய வேண்டிய தொன்றுதான். கம்பர் தமதுகாவியத்துக்கு 'இராம அவதாரம்' என்று தான் பெயரிட்டார். முடிவில், கம்பரின் கைத்திறன் அக்காவியத்தின் பெயரைக் 'கம்ப இராமாயணமா'க்கியது.

## இராமாயணத்தின் சிறப்பு

கம்பன் தமது காவியத்தில் இராமரைக் கடவுளின் மறு அவதாரம் என்று கூறமறக்கவில்லை. ஆனாலும் இராமாயணத்தில் இராம பாத்திரத்தை அமைக்கும்போது, இராமரை ஒரு சாதாரண மனிதராகவே படைத்திருக்கிறார். இராமர் தன்னை ஒரு கடவுளாகவோ, தெய்வ அவதாரமாகவோ எண்ணுவதுபோலப் படைக்கவில்லை. மக்களுடன் மக்களாக வாழும் ஒருவனுகவே இராமனைப் படைத்து, கவிச்சக்கரவர்த்தியாகிவிடுகிருன் கம்பன். இதுவொன்றே கம்ப இராமாணயத்தின் சிறப்புக்குச் சான்று கூறுகிறது.

கம்பன் தனது காவியத்தில் 'கடவுட்' பொருளுக்கு முதன்மை கொடுக்கவில்லையென்பது புலனுகின்றது. மனிதத் தெய்வத்தைக் காட்டுவதிலேயே தனது பூரண கைவண்ணத்தைக் காட்டியிருக்கிறார். கம்பனின் 'அகலிகை' படலத்தைப் படித்தபிறகு யாருக்காவது தேவர்களை கையெடுத்து வணங்க மனம் வருமா?

## பெண்ணின் பெருமை

இராவணன் முத்தமிழ் வளர்த்த அறிஞர்கள் வரிசையில் சேர்க்கப்படவேண்டிய பேரரசன்; அவன் தனது நாட்டை வளம் குன்றாது ஆட்சிபுரிந்து வந்தான். ஆனாலும் பெண்ணை அவன் மனிதப்பிறவியாக எண்ணாத காரணத்தினால் முடிவில் அழிந்து ஒழிந்து போகிறான்.

பெண் - அவள் தாய்மையின் வடிவம், கற்பின் சின்னம் - இதனைப் படம்பிடித்துக் காட்டுகிறார் கம்பர். பெண்ணைக் கடவுள் போல மதிக்கவேண்டுமென்ற பெரிய சித்தாந்தத்தைச் சொல்லிவைக்கிறார்.

மேனாட்டு இலக்கியங்களிலோ, காவியங்களிலோ இப்படியான ஒரு லட்சியப் பெண்ணைக்காண முடியாது. கணவனைவிட்டு வேறொருவனைக் காதலிக்கும் காரிகையையும், கைம்பெண்ஒருத்தி ஒருவனைக் காதலிப்பதையும், கணவனையே சாகவைக்கும் 'புதுமை'ப் பெண்ணையும் தான் மேனாட்டு இலக்கியங்களிலும், காவியங்களிலும் காணமுடியும். ஆனால் கம்பன் கண்ட பெண்ணோ பெண்ணின் பெருமையைக் கூறும் கற்புத்தெய்வம். கம்பனின் காவியத்துடன் எந்தவொரு மேனாட்டு இலக்கியங்களுமே போட்டிக்கு நிற்கமுடியாது என்று கூடச் சொல்லலாம். படலத்துக்குப்படலம் பெரிய பெரிய குறிக்கோள்களை எமக்குத் தருகிறான் கம்பன்.

## உலகம் ஒரு குடும்பம்

இந்தப் பரந்த உலகம் ஒரு குடும்பமாக வேண்டுமென்ற பெரிய குறிக்கோளை கம்ப இராமாயணத்தின் மூலம் காட்டுகிறான் கம்பன். இராமன் போகுமிடங்களிலெல்லாம் சுக்ரீவன், குகன், விபீஷணன் எல்லாரையும் சகோதரர்களாக்கிவிடுகிறான். கம்பன் கண்டது ஒரு 'ராம ராஜ்யம்'. இந்த உலகம் என்று ஒரே குடும்பமாகின்றதோ, அன்றுதான் கம்பஇராமாயணம் இன்று இனிப்பதை விட கூடுதலாக இனிக்கும்; சுவைக்கும்.

## உரையாசிரியர்களின் 'கொழுப்பு'

தமிழ்ப்பெரும் காவியங்களுக்கு உரை எழுதவந்த உரையாசிரியர்கள் கம்ப இராமாயணத்தை இருட்டடிப்புச் செய்துவிட்டார்கள். தொல்காப்பியத்துக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியரும், திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகரும் கம்ப இராமாயணத்தை மேற்கோள் காட்டத்தவறி விட்டார்கள். அவர்களுடைய 'தலைக்கொழுப்பு'த்தான் இப்படிச் செய்யவைத்ததென்று எண்ணுகிறேன். ஆனாலும் கம்ப இராமாயணம் இவ்வளவையும் மீறி 'மக்கள் இலக்கியமாக' மலர்ந்தது.

12-ம் நூற்றாண்டில் குலோத்துங்க சோழன் காலத்தில்தான் கம்பர் வாழ்ந்தார் என்று குறிப்பிட்டுச் சொல்லப்படுவதை என்னவோ என்னால் ஏற்றுக்

(4ம் பக்கம் பார்க்க)

## அயல் நாடுகளில் சைவம் - 2

# சிந்துவெளி ஆராய்ச்சி தரும் அதிசய உண்மை

— ந. சி. கந்தையாபிள்ளை

இந்தியாவே சைவத்துக்குப் பிறப்பிடமென்னும் நம்பிக்கை நீண்டகாலமாக இருந்துவருகிறது. புராணக் கதைகளும் இதிகாசக்கதைகளுமே இதற்கு ஆதாரமாக இருந்தன. சரித்திரமுறையான அல்லதுபழம்பொருள்களின் கண்டுபிடிப்பு முறையான ஆதாரங்கள் அண்மைக் காலம்வரை கிடைக்கவில்லை. 1921-க்கும் 1922க்குமிடையில், பழைய நகரங்களின் அழிபாடுகள் எனக்கருதப்பட்ட இரண்டு பெரிய மண்மேடுகள் சிந்து வெளியில் அகழ்ந்து ஆராயப்பட்டன. அவ்விடங்களின் பெயர்கள் மொகஞ்சதாரோ, அரப்பா என்பன. இவ்விரு இடங்களுக்குமிடையிலுள்ள தொலைவு நானூறு மைல். இவ்விடங்களில் தொல்பொருள்கள் பல கிடைத்தன. ஒருவகை மாக்கல்லில் உருவங்களும், எழுத்துகளும் வெட்டப்பட்ட முத்திரைகள் அவைகளுட் காணப்பட்டன. அட்டணைக் காலிட்டுக்கொண்டு ஆல் அல்லது அரசின் கீழ் தியானத்திலிருக்கும் மூன்று முகங்களுடைய மனித வடிவமொன்று இரண்டு முத்திரைகளிற் காணப்படுகின்றது. இவ்வடிவத்தைச் சுற்றிக் காண்டாமிருகம், புலி, யானைமுதலிய விலங்குகள் காணப்படுகின்றன. அம்மனித வடிவம் இருக்கும் பீடத்தின் கீழ் இரண்டு மான்கள் காணப்படுகின்றன. இவ்வுருவம் இன்னொருநிலையில் அமைக்கப்பட்ட ஒரு முத்திரையும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இம்முத்திரையில் அவ்வடிவம் பாம்போடு சம்பந்தப் பட்டுள்ளது. இம்முத்திரைகளிலுள்ள வடிவங்களைப் பற்றி ஆராய்ந்த சேர் ஜோன் மார்ஷல் அவை பசுபதிக் கடவுளைக் குறிப்பதாகக் கூறியுள்ளார். சிந்து வெளியிற் கிடைத்த தொல்பொருள்கள்பற்றிஆராய்ச்சி நடத்திய பிறரும் சேர். ஜோன் மார்ஷல் கூறியிருப்பதையே வழிமொழிந்திருக்கின்றனர். இன்று இக்கொள்கையே எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்படுகின்றது.

இவ்வடிவத்தைப் பின் பற்றியே எலிபண்டாக் குகையிலுள்ள சிவன் உருவம்மூன்று முகங்களுடையதாக அமைக்கப்பட்டுள்ளது. இவ்வகை உருவம் முதலாம் அல்லது இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த வட இந்திய நாணயங்களிலும் காணப்பட்டன. தக்கணமூர்த்திவடிவமும், தியானத்திலிருக்கும் புத்தர் வடிவமும் மொகஞ்சதாரோ முத்திரையிலுள்ள வடிவத்தைப் பின்பற்றியவை என்று கருதப்படுகினறன, பிற்காலச் சிவபெருமான் வடிவம் மொகஞ்சதாரோ பசுபதி வடிவத்தைப் பின்பற்றி வருகின்றது. 1. மொகஞ்சதாரோ நாகரிகத்தின் மேலெல்லை கி. மு. 3300 என்று சொல்லப்படுகின்றது.

மொகஞ்சதாரோ சிவன் வழிபாட்டைக் குறித்து இராய் என்பவர் (P. B. Roy M. A.) கூறியிருப்பது வருமாறு: 2. வரலாற்றில் சேர் ஜோன் மார்சலின் கூற்று உறுதிப்பட்டால், மக்கள் கைக்கொண்டுவரும் வழிபாடுகளுள் சிவமகேசுவரர் வழிபாடு மிகப்பழமை யுடையது. காசியில் சிவன் வழிபடப்படுவது போல மொகஞ்சதாரோவில் சிவன் வழிபடப்பட்டிருந்தால் அவ்வழிபாடு மிகத்தொன்மை வாய்ந்தது. சிவனோடொத்த பழமையுடைய அக்கேடிய, சுமேரிய, எகிப்திய, கிரேக்க, அசீரிய, பாபிலோனிய கடவுளர் மிகப்பழங்காலத்திலேயே வழிபடுவோரின்றி மறக்கப்பட்டுவிட்டனர். அக்கடவுளர் இன்று வழிபடப்படுவதில்லை. பல லட்சம் இந்திய மக்கள் சிவனைக் கடவுளின் கடவுளாகக் கொண்டு வழிபடுகின்றனர். சிவவழிபாடு அதிசயங்களுள் அதிசயமானது. இவ் வழிபாடு மொகஞ்சதாரோ காலம் முதல் ஐம்பது நூற்றாண்டுகளாக பலகோடி மக்களிடையே நிலவிவருகின்றது. வேறொரு வழிபாட்டுக்கும் இவ்வளவு பழமை கிடையாது. அது ஐயாயிரம் ஆண்டுகளாக ஆற்றொட்டம் போல் தொடர்ந்து வந்த போதும், நின்று போவதற்கோ குன்றிப் போவதற்கோ அறிகுறிகள்காணப்படவில்லை. இவ் வழிபாடு மிகப்பழமையுடையது, மாத்திரமல்லாமல் மேலும் பலகாலம்நீடித்துநிலைபெறக் கூடிய உயிர்ப்புடையதாகவுமிருக்கின்றது. இது தேய்ந்து குன்றி, நூதன பொருட்காட்சிப் பொருளாக இருக்கவில்லை. சிவவழிபாடு நமக்கும் மொகஞ்சதாரோ மக்களுக்கும் தொடர்பை உண்டாக்குகின்றது. அது மொகஞ்சதாரோ காலத்திலிருந்தது; பின் வேதகாலக் கிராமங்களில் அலைப்புண்டது. அப்பொழுது சிவன் பிராமணருடைய தெய்வமாக, அல்லது அவர்களின் உயர்ந்த தெய்வமாகக் கொள்ளப் படவில்லை. அவர், ஆதிக்குடிகள், தொழிலாளர், குயவர், காட்டுச் சாதியினரின் தெய்வமாகவிருந்தார். சிவன் என்னும் பெயர் சிவந்தவன் என்னும் பொருளில் 'சிவ' என்னும் தமிழ் அடியாகப் பிறந்ததென அறிஞர் கூறியிருக்கின்றனர்.

இந்தியாவிலே பெல்லாரி மாவட்டத்தில் கற்கால மக்கள் பயன்படுத்திய தொல்பொருள்களோடு சிவலிங்கமும், படுத்த நிலையிலுள்ள இடபத்தின்உருவமும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை மொகஞ்சதாரோ காலத்துக்கு முந்தியவை. மொகஞ்சதாரோ நாகரிகம் புதியகற்காலத்துக்குப் பிந்தியசெம்புக்காலத்தது 3. சிவாலிக் மலையிலும் புதிய கற்கால மக்கள் பயன்படுத்தியஇலிங்கங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

மொகஞ்சதாரோவிற் காணப்பட்ட சிவன் வடிவத்துக்கு மூன்று முகங்கள் காணப்படுகின்றன. அவை படைத்தல், காத்தல், அழித்தல் என்னும்முத்தொழில்களைக் கடவுள் புரிகிறார் என்னும் குறிப்புப் பொருளை உணர்த்துகின்றனவென்று அறிஞர் கூறியிருக்கின்றனர். மூன்று தலைகளுக்குமறுபுறத்தில் வெளியிற் காணமுடியாதபடி இன்னொரு முகமிருக்கலாமென்றும், நான்குமுகங்களிருப்பதாகக் கொண்டால் அவை கடவுள் எல்லாத் திசைகளையும் பார்ப்பவர் (எல்லாமறிபவர்) என்னும் குறிப்புப்பொருளையும்உணர்த்தும் என்றும்சிலர் கூறியுள்ளனர். பிற்காலத்தில் மொகஞ்சதாரோச் சிவன் கடவுளின்வடிவம் பின்பற்றி அமைக்கப்பட்டமூன்றுமுகங்களுடைய எலிபண்டாச் சிவன் வடிவமும், கட்பிஸ் அரசனது நாணயங்களிற் காணப்படும் மூன்று முகங்களுடைய சிவன் வடிவமும் இக்கருத்தை ஆதரிக்கவில்லை.

இன்று நமக்குத் தெரியக் கூடிய வடிவங்கள்எல்லாவற்றுள்ளும்சைவம்மிகப்பழமையுடையதெனச் சேர் யோன் மார்சல்கூறியுள்ளார். "சைவ சமயமே சமயம். சமயாதீதப் பழம்பொருள்" என்பது தாயுமான சுவாமிகளின் அருள் வாக்கு.

ஆதாரம்


1. Indus Civilization - Sir John Marshall

2. Journal of the Department of Letters - Vol XXX (1938)

3. Pre-historic South India - V.R. Ramachandra Dikshitar



அழுக்கணவன், புழு, பூச்சி 3-ம் அழிப்பதற்கு புதிய ஜெர்மன் மருந்து

BAYER

பொலித்தியோன்

FOLITHION

விநியோகஸ்தர்கள் இல்லாத கிராமங்களில் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

T'GRAMS:- ROYAEL ROYAL DISPENSARY PHONE: 397 JAFFNA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம்விசுவாவசுஆண்டுகார்த்.மீ 20 வ(5-12-65)

# தேசீய ஒற்றுமை

'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்பது பழமொழி. ஒற்றுமையின் அவசியத்தை எடுத்துக்காட்டுவதுஇந்தப்பழமொழி. பழமொழி மட்டுமல்ல பலபல கதைகள், கற்பனைக் கதைகளும் உண்டு; என்றாலும் வேற்றுமையும் எக்காலமும் இருந்துவருகிறது. வேற்றுமையில் ஒற்றுமை காண்பதுதான் நாகரிகம், பண்பாடு. ஒற்றுமையைக் குலைப்பவர்கள் எக்காலத்திலுமிருக்கின்றனர். அவர்கள் தொகை அதிகமாகவும் இருக்கும். குலைக்கும் அழிக்கும் வேலைகள் கஷ்டமானதல்ல. மிகச் சுலபம். ஒற்றுமையை உருவாக்குபவர்களும், பேணுபவர்களும் குறைவாகத்தானிருப்பர். உருவாக்கும் பணி சுலபமானதல்ல.

இலங்கையில் ஒன்றுக்குமேற்பட்ட இன, மத, மொழி பேசும் மக்கள் பன்னெடுங்காலமாக வாழ்ந்துவருகின்றனர். இடையிடையே இம்மக்களுக்கிடையில் வேற்றுமையும், போட்டியும், பூசலும் ஏற்பட்டுள்ளபோதிலும், "சண்டை செய்தாலும்நாம் சகோதரரன்றோ" எனமீண்டும் மனம் மாறி ஒன்றுபட்டுவிடுவதுண்டு. வேற்றுமையும், போட்டியும், பூசலும், பிளவும், பிரிவினையும், நாட்டுக்கும் நாட்டுமக்களுக்கும் கெடுதியையே விளைவிக்கும்என்பதை உணர்ந்தனர். தேசீய ஒற்றுமையின் அவசியத்தை பலரும் உணர்ந்தனர். இதன் பயனாக ஒற்றுமை வளர்ந்தது. அந்நிய ஆட்சியிலிருந்து நாடு விடுதலை அடைந்தது.

அதிகாரம் கைக்கு வந்ததும், மீண்டும் போட்டியும், பூசலும் கிளம்பியது. அப்பொழுதும் சிலர் ஒற்றுமையின் அவசியத்தை மறந்துவிடவில்லை. ஆனால் அதிகாரப் போட்டி, பொறாமையை வளர்த்தது. ஒற்றுமையைக் குலைக்கும் வழியைக் காட்டினர் சிலர். அவர்களைப் பின்பற்றிய கூட்டம் வளர்ந்தது. "கடைசி இந்தியன் இங்கிருந்து போனபின்தான் நிம்மதியாகச் சாவேன்" என்று சாவில் நிம்மதிகாண விரும்பியவர்கள், பின்னர்-சாவில் நிம்மதி காண்பதற்கு தேசீய ஒற்றுமை தான் தேவையென்பதை உணர்ந்துகொள்ள நேர்ந்தபோதிலும் - சாவில்கூட நிம்மதிகாணமல் மறைந்துவிட்டனர்.

இன்று புதிய குரல்ஒலிக்கிறது. "இந்தநாட்டிலுள்ள ஒவ்வொரு பிரஜையும்அவர் சிங்களவராயினும், தமிழராயினும், முஸ்லிமாயினும், பறங்கியராயினுஞ்சரி, "இது எனது சொந்தநாடு" எனச் சொல்லும் நாளே எனது வாழ்க்கையிலேயே மிக மகிழ்ச்சியான நாளாக இருக்கமுடியும்" என்று நமது பிரதமர் - வாழ்வில் தேசீய ஒற்றுமையில் இன்பம் காண விழைகிறார். வகுப்புவாதம் என்னும் பயங்கர ஓசை மீண்டும் ஒலிக்கத் தொடங்கும் சமயத்தில் தேசீய ஒற்றுமையின் சங்கநாதம் கேட்கிறது.

ஒற்றுமையைப்பற்றியும் தேசீய ஐக்கியத்தைப்பற்றியும் இதற்கு முன்பும் பலர் முழங்கியிருக்கின்றனர். ஒருநாடு, ஓர் இனம், ஒரு மொழி என அந்த முழக்கம் கேட்டது. சிறுபான்மையினரின் மொழி, மதம் இல்லாதொழிக்கப்பட்டால் சிறுபான்மையினம் ஒழிந்துவிடும், அதன்பின் ஒரேஇனம், ஒரேமொழி, ஒரேமதம் தான் இருக்கும். இதன்மூலம் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தி விடலாமென்பது அவர்கள் நம்பிக்கை. இது அழிவுப்பாதை. பல இன, மத மக்களும் தங்கள் மொழி, பண்பாடு வேறுபட்டவையாக இருப்பினும், வேற்றுமையில் ஒற்றுமைகண்டு வாழ்வதுதான் உலகம்; நாகரிகம். நாடுமுன்னேற, நாட்டு மக்கள் சிறப்புடன்வாழ தேசிய ஒற்றுமை அவசியம். சென்ற பல வருடங்களாக பின்தங்கிய நிலையிலிருக்கும் நமது நாட்டின் வளர்ச்சிக்கும் சிறப்புக்கும் ஒற்றுமை அவசியம். ஒற்றுமையின்மூலம் வாழ்வில் இன்பமும் நிம்மதியும்காண இந்நாட்டை வழி நடத்தும் பொறுப்பை ஏற்றுள்ள பிரதமர் விரும்புகிறார். அந்த விருப்பத்தை நிறைவேற்றுவதன்மூலமே இந்நாட்டு மக்கள் இன்பங் காண முடியும்.



# கார்த்திகைத் திருநாள்

— சேந்தன் —

தக்கனோர் யாகஞ் செய்து
தருமவிப் பாகந் தன்னை
முக்கணன் றனக்கே ஈயா
முறமையை மனதிற் கொள்ள
மிக்கசீர் தவத்தின் மேலோன்
மேதகு ததீசி யென்பான்
தக்கநீ யழியுங் காலந்
தலைப்படும் தவிர்க என்றான்.

என்றசொல் கேளாத் தக்கன்
இயற்றிய யாகங் காண
சென்றன னுமையு மற்றைத்
தேவர்களயனு மாலும்
என்றதை யுணர்ந்த ஈசன்
ஏவிய வீர பத்ரன்
அன்றவன் சிரமுங் கொய்துமற்
றனைவர்க்கு மடியு மிட்டான்.

ஆங்கடிப் பட்ட மாலும்
அயனும்பின் தங்க ளுள்ளே
ஈங்குயார் பெரிய ரென்றே
எதிர்சமர் செய்த காலை
ஓங்குயர் பிளம்பாஞ் சோதி
உதித்தச ரீரி தன்னால்
நீங்களிவ் வெல்லை காண்கில்
நினைத்தது சரியா மென்ன

ஆதியு மந்த மில்லா
அரும்பெரு மிறையின் மேலாஞ்
சோதியின் தோற்றங் காண்போர்
சுருதியின் முதல்வ ரென்றே
பாதியி லமரை நீக்கிப்
பாருளே செல்ல மாலும்
வேதிய னந்தங் காண
விண்ணுளே பறந்து சென்றான்.

பன்றியின் வேடந் தாங்கிப்
பாரினை யகழ்ந்த மாலும்
கன்றிய மனத்த னாகிக்
காண்கில னென்று மீண்டான்
சென்றுமே லன்ன மீதிற்
தேடியு முடியை வேதன்
ஒன்றுமே காணா னாகி
உணர் வழிந் திரங்கு மெல்லை

இறைவனின் முடியால் வீழ்ந்த
எழிலுறு மலராந் தாழை
மறையவன் முன்னே காண
வருதலு மதனைப் பற்றி
நிறையுடை மனத்த னாகி
நிலமிசை யதனைச் சேர்த்தே
முறமையிற் கண்ட தாக
மொழிந்தனன் மலருஞ் சொல்ல

ஆங்கவ னுரைத்த மாற்ற
மரனுமே சினத்த னாகி
ஈங்குநீ ருரைத்த பொய்யால்
இம்மலர் பூசைக் காகா
நீங்குக நினக்குங் கோயில்
நிலமிசை யென்றே சொல்ல
பாங்கரில் நின்ற மாலும்
பதைத்தனன் பிரம னோடே.

பங்கையன் முகுந்தன் பின்னர்
பக்தியால் லிங்கஞ் செய்து
தங்களின் பிழையை நொந்து
தவத்தினைச் செய்த காலை
அங்கவர்க் கபய மீந்தே
ஆட்கொளு நாளா மிந்த
கங்கைவார் சடையார் போற்றும்
காத்திகைத் தீப நாளாம்.

# 'கார்த்திகைக்குக் கார்த்திகை அளப்பரும் சோதி....'

— மு. ஜயரத்தினம் —

ஆங்கில நாள்காட்டியின் படி நவம்பர், டிசம்பர் மாதங்களிடையே வரும் தமிழ் கார்த்திகை, மாதங்களில் மகிமை பொருந்தியதாகக் கருதப்படுகிறது. கார்த்திகைப் பூரணையுடன் வரும் கார்த்திகை விளக்கீடு, கார்த்திகைச் சோமவாரம், கார்த்திகைப்பிறை, கல்யாண முகூர்த்த சுபதினங்கள் என்று பலவற்றால் தனிச் சிறப்புப் பெறுவது இம்மாதம்.

பத்மபுராணத்து உத்தர காண்டத்தில் இதன் மகிமை பற்றி நிறையக் கூறப்படுகிறது. தூயவேதங்களை சங்கய அசுரன் களவாடிக் கொண்டு கடலுள் ஓடி மறைந்துவிட்டான்; விஷ்ணு மச்ச வடிவெடுத்து கடலினுட் சென்று அசுரனைக் கொன்று வேதங்களை மீட்டுத் தேவர்களுக்குக் கொடுத்தார் என்றும் விஷ்ணு மச்ச உருவெடுத்த நாள் கார்த்திகை மாதத்து 11-ம் நாள் என்றும் பத்ம புராணத்தில் கூறப்படுகிறது. இந்நூலில் பிறிதோர் இடத்தில் கிருஷ்ணர் தனது மனைவி முன்னொரு போது பிராமணப் பெண்ணாய் இருந்து தன்னை அடைய கார்த்திகை மாதத்தில் விரதம் இருந்ததின் பயனாக கிருஷ்ணரை மணமகனாகப் பெற்றார் என்று கூறப்படுகிறது. கார்த்திகை மாதத்து விரதங்களின் மகிமைகள் இவ்வாறு பல.

கார்த்திகை மாதத்தில் தான் கோகுல மக்கள் இந்திரனுக்குச்செய்ய வேண்டிய வணக்கத்தைக் கைவிட்டு கோவர்த்தனராகிய கிருஷ்ணனை வழிபடத்தொடங்கினர். இம்மாதத்தில் மாடுகளை அலங்கரித்து, பூசையிட்டு அகமகிழ்ந்து வணங்குகின்றனர். இத்துடன் இம்மாதம் சர்வசகோதரத்துவ மாதமாகக் கொண்டாடு வந்த மனதில் வைப்பதற்கு [illegible] வணங்கும் வழக்கம் கொண்டாடப்படுகிறது. கார்த்திகைப்பூரணை நாளில் மக்கள் கோவில்களிலும், வீடுகளிலும், தீபங்கள் ஏற்றி வழிபடுவர். திரிபுர சங்காரனாகிய சிவன் திரிபுரசங்காரம் செய்து கொடுமையை ஒழித்து தர்மத்தை நிலைநிறுத்திய நாளாகிய இத்தினத்தையே நாம் கார்த்திகை விளக்கீடாக நாடெங்கும் கொண்டாடுகிறோம்.

கார்த்திகை மாத ஏகாதசியை பூசைகளிட்டும், புண்ணிய தீர்த்தங்களில் நீராடியும் வரவேற்கின்றனர். விஷ்ணு பரமாத்மா தனது நாலு மாத துயில் நீத்து விழித்து எழுந்தநாள் இதுவாம்.

கார்த்திகை மாத முதல் சதுர்த்தசியில் விஷ்ணு சிவனைவழிபடும் பொழுது 1000 தாமரைகள் கொண்டு பூசிக்கத் தொடங்கி கடைசியாக ஒரு பூவைக் காணாது தயங்காதுதனது கண்ணையே பூவாகப்பாவித்து பூசித்ததின் பயனாக சுதர்சன் என்னும் சக்கரத்தைப் பெற்றார் எனவும் ஒரு புராண வரலாறு உண்டு. இத்தினத்திலே மக்கள் விஷ்ணுவுக்கு 1000 தாமரை கொண்டு வழிபட்டு வருகின்றனர்.

இந்துப்பெண்கள் துளசி பூசைசெய்வதும்கார்த்திகை மாதத்தில்தான். துளசியை விஷ்ணுவாகப் பாவித்து பூசையும் நிவேத்தியமும் இட்டுவழிபடுவர். இத்தினம் கார்த்திகையின் 11-ம்நாளாகும். இத்தினம் தொட்டு இந்துக்களிடையே கல்யாண காலம் தொடங்குகிறது. இப்படியே கார்த்திகை மாதத்து எல்லா நாளுமே புனித நாட்களாக இருப்பதைப்பார்க்கலாம்.

'கார்த்திகைக்குக் கார்த்திகை அளப்பரும் சோதி காணா நிற்போம்' என்பது அருணாசல புராணம்.

## புத்தகம் செய்த வேலை

புத்தகம் படிப்பதில் ஆர்வம்மிக்க அவன் ஒரு ஏழைத் தச்சுத்தொழிலாளியின் மகன். அவன் இரவல் வாங்கியே படிப்பான். "ஜனாதிபதி வாஷிங்டன்" என்ற நூலை ஒருமுறை இரவலாகப் பெற்று வந்தான். அவன் ருசியாக அதைப் படித்துக் கொண்டிருக்கும் போது எண்ணெய் முடிந்து விளக்கு அவிந்துவிட்டது. பையன் ஜன்னல் பக்கமாகப் புத்தகத்தை வைத்துவிட்டுத் தூங்கிவிட்டான்.

காலையில் அவன் புத்தகத்தைக் கண்டதும் அதிர்ச்சியடைந்தான். அன்றிரவு பெய்த மழையில் புத்தகம் மூழ்கிவிட்டிருந்தது. புத்தகச் சொந்தக்காரனிடம் சென்று நிலைமையை விளக்கி மன்னிப்புக்கேட்டான். அவரோ புத்தகப்பெறுமதியைக் கொடுக்கவேண்டும்; இல்லாவிட்டால் தன் வயலில் மூன்றுநாள் வேலை செய்யவேண்டும் என்று விதித்தார். அவன் அப்படியே மூன்று நாளாகக்கஷ்டப்பட்டு உழைத்துப் புத்தகத்தைப் பெற்றுக் கொண்டான். அந்தப் புத்தகமே அவனை ஜனாதிபதியாக்கிவிட்டது. அவன் யார் தெரியுமா? அடிமையாகவோ, அடக்குவோனாகவோ இருக்க விரும்பாத அமெரிக்க ஜனாதிபதி ஆப்ரஹாம் லிங்கன்.

—'உமைதாசன்'

## பொம்மை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பாடல்களும் நன்றாக அமைந்துள்ளன. பாலச்சந்தரின்படமல்லவா? குறைவாகப் பாட்டுக்களைப் போட்டு நிறைவுபடச்செய்துள்ளார்.

'பட்டஞ் சூடாத' நடிகர்களை வைத்துக் கொண்டு எப்படி ஒரு நல்ல படம் தயாரிக்கலாம் என்பதை பாலச்சந்தர் நமக்கு நன்கு காட்டியிருக்கிறார். தமிழ் திரைக்கு இதன்மூலம் ஒரு வழி காட்டியிருக்கிறார்.

ராஜா தியேட்டரில் தற்போது திரையிடப்பட்டுள்ள 'பொம்மை' குடும்பத்தோடு சென்று பார்க்கக்கூடிய படம். — கணேஷ்

## மனிதனிடத்தே...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ள முடியாமலிருக்கிறது. சோழர்கள் இப்படித்தான் வாழவேண்டுமென்பதற்காகவே இராமரையும், அவன் அறம்மிக்க அரசியல் வாழ்க்கைக் கதையையும் படைத்திருக்கிறார் கம்பர் என்றே சொல்வது சரியென்று எனக்குத் தோன்றுகிறது.

(யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்ற கம்பன் விழாவில் தெ. பொ. மீ. ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம். தொகுத்து எழுதியவர் பாமா).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரமுகர்களும் சம்பவங்களும்

## கரீபா அணை

ரொடீஷியா-ஸாம்பியா எல்லையிலுள்ள கரீபா அணைக் கட்டைப் பாதுகாக்க பிரிட்டிஷ் துருப்புக்கள் அனுப்பப்பட்டிருப்பதாக சமீபச்செய்திகள் கூறின.

கரீபா அணை, சுமார் 150 கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்ட பிரமாண்டமான ஒரு நீர்த்தேக்கமாகும். ஸாம்பியாவிலுள்ள செப்புச் சுரங்கங்களுக்குத் தேவையான மின்சாரத்தை அளிப்பது இந்த அணைதான். ஆனுல் அதற்கான கடிவாளம் தெற்கேயுள்ள ரொடீஷியாவிடம் இருக்கிறது. வம்பில் பிறந்த ரொடீஷிய அரசாங்கம், ஏதாவது வம்புத்தனம் செய்துவிடுமோ என்ற அச்சத்திலேயே ஸாம்பியா அதிபர் கவுண்டா பிரிட்டனிடம் பாதுகாப்பு உதவி கோரினுர்.

★

## "விஸி" மறைவு

''விஸி'' என செல்லமாக அழைக்கப்பட்டவிஜயநகரம் மகராஜ்குமார் காலமானது பல கிரிக்கெட் அபிமானிகளுக்கு வருத்தம் அளித்திருக்கும். விளையாட்டுப் பிரியரான 'விஸி' தனது முதிர்ந்த வயதிலும் பல கிரிக்கெட் விளையாட்டுக்களைச் சிறப்பான முறையில் விமர்சனம் செய்திருக்கிருர். இந்த விளையாட்டு சம்பந்தமான நுட்பங்களும், பழைய சரித்திரங்களும், புள்ளிவிபரங்களும் அவருக்கு மனப்பாடம். சமீபத்தில் ஆஸ்திரேலியாவுக்கும், இந்தியாவுக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் டெஸ்டுகளை அவர் வெகு உற்சாகத்துடன் வருணனை செய்தது இன்னும் காதுகளில் ரீங்காரமிட்டுவருகிறது. விமர்சகர்களின்மத்தியில் அவருக்கு''மூத்தவர்'' என்றமரியாதைவழங்கப்படுவதுண்டு. லோக சபையில் ஓர் அங்கத்தினராகவும்அவர் இருந்தார். மகராஜ்குமாருக்கு வயது 60.

''விஸி'', சுதந்திரத்திற்கு முன் உத்தர பிரதேச அரசாங்கத்தில் நீதிமந்திரியாக இருந்தவர்.

இறப்பதற்கு முதலிரவுதான் அவர் நேபாள மன்னர் மகேந்திராவுக்கும், ராணி ரத்னுவுக்கும் தன் அரண்மனையில் விருந்தளித்துக்கெளரவித்தார்.

ஆனுல்மறுநாட்காலைஅவர் நித்திரையிலிருந்து எழும்பவேயில்லை. அரண்மனை ஊழியர்கள் அவரை எழுப்பச் சென்றபோது உயிரற்ற அவரது உடலையேகண்டார்கள். பத்மபூஷன் விருது பெற்ற அவரது 60-வது பிறந்தநாளைக் கொண்டாட இம்மாதம் 28-ம் திகதி அவரது அபிமானிகள் பெரிய ஏற்பாடுகள் செய்திருந்தனர்.

கிரிக்கெட் உலகில் விஜயநகரம்மகாராஜா, பரோடா மகாராஜா, பாட்டியாலா மகாராஜா, பட்டோடி நவாப் உட்பட எத்தனையோ அரசர்கள் புகழ் பெற்றிருந்தார்கள். விளையாட்டிலிருந்து ஓய்வுபெற்றிருந்தாலும் ''விஸி'' கிரிக்கெட் விளையாட்டில் தனது உற்சாகத்தைக் கடைசிவரை இழக்கவே இல்லை.

★

## மொபுட்டு

காங்கோவில் ஜெனரல் மொபுட்டு அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கிருர் அல்லவா? அவருக்கு வயது 35 தான். அவரது பிரதமர் மொலும்பாவுக்கு வயது 34. இந்தச் சிறுவயதில் இவர்கள் சிரமமான ஒரு நாட்டின் முக்கிய பொறுப்பை வகிப்பது சிரத்தையை ஏற்படுத்துவதாகும்.

மிகச்சிறிய வயதில் பெரும் பதவி வகித்தவர்கள் சமீப சரித்திரத்தில் வெகு சிலரே ஆவர். காலஞ்சென்ற பர்மியப்பிரதமர் ஆங்ஸான், ஐக்கிய அராபியக் குடியரசுத் தலைவர் நாஸர், முன்னுள் அமெரிக்க ஜனுதிபதிகளான பிராங்க்ளின் ரூஸ்வெல்ட். ஜோன் கென்னடி போன்ருேர் ஒருசிலர். ஒரு காலத்தில் பிரிட்டிஷ் பிரதமராயிருந்த இளையபிட் சரித்திரத்தில் புகழ் பெற்றவர். அவருக்கு வயது 25 தான்.

மொபுட்டு ஓர் எழுத்தாளர். பத்திரிகாசிரியராயும், ராணுவத்தில் சார்ஜண்டாயும் இருந்தவர். படிப்படியாக ஜெனரலாக உயர்ந்தார். லுமும்பா கொலை செய்யப்பட்டபோது அவருக்கு வயது 29. அப்போதே ராணுவத்தைத்தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்.

★

## வியட்னும்

வியட்னும் யுத்தம் இப்போது மிகவும் பலத்துவிட்டது. அமெரிக்கப் படைகளுக்கு இதுவரை ஏற்படாத சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. வெறும் கொரில்லாக்கள் பலம் பொருந்திய படைகளுக்கு இவ்வளவு சேதத்தை ஏற்படுத்த முடியுமா எனக்கேட்பது தெரிகிறது. ஆனுல் தென்வியட்னும்-கம்போடிய எல்லையில் இப்போது கொரில்லாக்கள் மட்டும் சண்டையிடவில்லை. அவர்களுக்குப்பக்கபலமாக, முறையான வடவியட்னும் பட்டாளங்கள் சண்டையிடுகின்றன. சுமார் 9 பட்டாளங்கள் இருப்பதாக அமெரிக்க பாதுகாப்பு மந்திரி மக்னமாரா மதிப்பிட்டிருக்கிருர்.

கொரில்லாக்கள் தங்கள் பலத்தைஇப்போதுநாளுக்கு நாள் அதிகரித்து வருகிருர்கள். எனவே அமெரிக்காவும் தன் பலத்தை இரட்டிப்பாக்கப்போவதாகக் கூறப்படுகிறது. தென்வியட்னுமிலுள்ள ஒன்றரை லட்சம் அமெரிக்கத்துருப்புக்கள் மூன்று லட்சமாக அதிகரிக்கப்படலாம் என்றும், வடவியட்னும் மீது ராக்கெட்டுகளைஉபயோகிக்கக்கூடுமென்றும் கருதப்படுகிறது. இன்னும் சில நாட்களில் இந்த விபரம் தெளிவாகத் தெரியக்கூடும்.

## உலகமேடை

டி. எம். எம்

ரொடீஷியா, ஸாம்பியா (முன்னுல் வடரொடீஷியா) ஆகிய நாடுகளை நினைக்கும் போது கூடவே சேர் சிசில் ரோட்ஸ், டேவிட் லிவிங்ஸ்டன் ஆகியோரின் பெயர்கள் ஞாபகத்திற்கு வரும்.

19-ம் நூற்றுண்டில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைக் கடைசியாக விஸ்தரிக்க முயன்றவர் சிசில்ரோட்ஸ். கேப் முனையிலிருந்து கெய்ரோவரை ஏகாதிபத்தியத்தை விஸ்தரிக்க அவர் கனவு கண்டார்.

ஆபிரிக்கா கண்டத்தைக் கண்டுபிடித்தவர் லிவிங்ஸ்டன். ஸம்பேஸி ஆற்றில் உள்ள அழகும், பயங்கரமும் கொண்ட விக்டோரியா நீர்வீழ்ச்சியை முதலில் கண்டவர் அவர்தான். கொடிய உஷ்ணம் நிறைந்த ஆபிரிக்காவில் பல அழகு மிக்க இடங்களை அவர்கண்டுபிடித்தார்.

ஆபிரிக்காவின் காலனி சரித்திரத்தில் ரோட்ஸ், லிவிங்ஸ்டன் ஆகியோரது பெயர்கள்என்றும் நிலைத்திருக்கும். பிரிட்டனில் அவர்கள் நினைவு இன்னும்பசுமையாய்இருக்கிறது.

## நமது நூல் நிலையம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கருத்துச் செறிந்த கதைகளைச்செய்யுள்வடிவிலிருந்து கருத்தை உருக்குலையாது வசனவடிவில் உருவாக்கி சமர்ப்பணம்செய்வதின் மூலம் தமிழிற்சிறுகதைகள் இல்லையென்ற வசையை அழிப்பதோடு, நல்ல பண்பு நிறைந்த கதைகளாகஅவை தமிழ் கூறும் நல்லுலகெங்கணும்வெள்ளத்தின் பெருக்கைப்போல் பரவிநம்வருங் காலச்சிறுர்கள் நற்பாதைகளிற் செல்ல வழிவகுத்து வைப்பனவே' என்ற ஆசிரியரின் பயனுள்ள கருத்து சிந்தனைக்குரியது.

பாரதி யுகத்தில் வாழும் நமக்கு ஆய்வுக் கண்ணேட்டத்துடன் திரு. வஸ்தியான் நீக்கொலாஸ் எழுதிய 'நான் கண்டபாரதி' பாரதியின் சிந்தனைகளைத் தெளிவாக அறிவதற்கு சிறந்த கருவியாக நிற்கிறது. பாரதி கருத்தை ஆராயும் ஆசிரியர் பாரதி வாழ்ந்த காலத்தையும் தமிழ் வளம்பெற்ற காலத்தையும் ஒப்பிட்டுக் காட்டுவதன் மூலம் வாசகர்கள் இருகாலச் சூழ்நிலைகளையும் அறியும் வாய்ப்பும் ஏற்படுகிறது.

—பூரணி

# தமிழ் தாய்

--- ஜீவா ஜெகந்நாதன் ---

### தமிழன் குரல்

நண்ணு முகவடிவைக் கண்டேன் - ஆயினவள்
நல்ல மலர்ச்சிரிப்பைக் காணேன்!
கண்ணும் கதைசொல்லக் கண்டேன் - ஆயினதில்
காந்தப் பெருநிலவைக் காணேன்!

உண்ணும் கனியிதழைக் கண்டேன் - ஆயினதில்
உருளும் தேனருவி இல்லை!
மின்னும் ஒளி உருவைக் கண்டேன் - ஆயினவள்
மேனி எழில் முழுதும் கோரம்!

பொன்னென்ற பூம்பொழிலைக் கண்டேன்
- ஆயினவள்
பூக்காமல் காய்க்காமல் பொலிவிழந்து நின்ருள்!
விண்ணுக்கும் மண்ணுக்கும் விடிவவளைக் கண்டேன்
- ஆயினவள்
வேல்கொண்டு தாக்குண்ட விழிமான் போல்
நின்ருள்!

பெண்ணென்ற பெருநிலவைக் கண்டேன்-ஆயினவள்
பேயென்ற பேரிடிபோல் பேசாமல் நின்ருள்!
கண்ணென்ற கன்னியை நான் கண்டேன்
- ஆயினவள்
கண்ணீரும் செந்நீரும் கலந்துருக நின்ருள்!

தோற்றத்தைக் கண்டுநான் துடித்தழுதுவிட்டேன்
- எந்தன்
துடிப்பதனைக் கண்டுஅவள் வெடித்தெழுந்து
நின்ருள்!
வாட்டத்தைக்கண்டு நான் வசமிழந்து நின்றேன்
- ஆயினவள்
வடுக்களைக் காட்டிவிட்டு வாய் திறந்து சொன்னுள்!

### தாயின் குரல்

ஈழவள நாட்டினிலே - எந்தன்
யாழ்ப்பாண வீட்டினிலே
வாழ வழி யில்லையடா - நான்
வாழ்ந்து கெட்ட முல்லையடா!

கேளும் இங்கே சொல்வேன் - என்
கேடு கெட்ட காதையடா!
பாழும் இந்த நாட்டினிலே- நான்
பாடு பட்ட பேதையடா!

கம்பனை - வள்ளுவனைக்
கவிமன்னன் பாரதியைத்
தெம்புடனே ஈன்றெடுத்தேன்! - உலகத்
தேவை யெலாம் தீர்த்து வைத்தேன்!

பெருவாழ்வு வாழ்ந்த என்னைப்
பிறர் சிரிக்கச் செய்துவிட்டீர்!
உருவான உண்மையெலாம்
ஓர் நொடியில் கொன்றுவிட்டீர்!

தெருவெலாம் பெயர் முழங்கச்
சில காலம் செழித்திருந்தேன் - அந்தோ
கருவோடு அழித்து விட்டீர்
காலத்தால் ஒழித்துவிட்டீர்!!

நான் பிறந்த வீட்டினிலே
நானே நாதி யற்றேன்! - என்
நலன் திகழ்ந்த நாட்டினிலே
நானே வளமிளந்தேன்!!

வான் புகழ்ந்த என்னை - இன்று
வாழ் விழக்கச் செய்துவிட்டீர்! - எந்தன்
தேன் கொடுத்த கைகளிலே
திரு வோட்டைத் தந்துவிட்டீர்!!

கோவிலுக்கே சிலையானேன் - என்
குலத்திற்கே கலை யானேன்
வாயிலுக்கோ நிலையானேன் - மக்கள்
வாழ்வுக்கோ விலையானேன்

கொலை வாளால் குத்துண்டேன் - கோரக்
கொடுமைகளால் தாக்குண்டேன்
நிலையில்லை நீதியில்லை - மகனே
நேர்மையில்லை உன்னிடத்தில்!

### மண்ணினில் இன்பங்கள் பலகோடி

இரவுக்குப் பின்னெரு பகலாணுய் - அதில்
இங்கமரர் புகழ் எய்திடுவாய்
கரவின்றி வாழ்வை கழித்திடுவாய் - என்றும்
காலத்தை வென்றிட விழித்தெழுவாய்.

சினிமா விமர்சனம்

## பொம்மை

டேன் என்று சொல்வது போல் 'சஸ்பென்ஸி'ல்தமது திறமையைக் காட்டுகிருர். நாமொன்று நினைக்கிருேம்; படத்தில் நடப்பது வேருென்று. சிங்கப்பூருக்கு விமானம் மூலம் சென்றவர், இந்நேரம் அங்கு இறங்கியிருப்பார்தானே என நினைக்கும் போது, விமானம்பழுதுபட்டு அவர் சென்னைக்கு மீண்டும் திரும்புகிருர். பிச்சைக்காரரொருவரிடம் பணம் சேருகிறது. ஏதோ அவர் இனி ஒரு படியாக வயிறு நிரம்ப உண்ணப் போகிருரே என்று நாம் ஆறுதல் கொள்ளும் போது அவரை எங்கிருந்தோ வந்த கார் மோதி உயிரைக் குடித்துச் செல்கிறது. இப்படி நிமிடத்துக்கு நிமிடம் எதிர்பார்க்க முடியாத சம்பவக் கோர்வைகளைக் கோர்த்ததற்காக - அதை திறம்பட டைரக்ட் செய்ததற்காக - தமிழ்ப்படத்தின் தரத்தை ஒரு படி உயர்த்தியதற்காக பாலச்சந்தரைப்பாராட்டத்தான் வேண்டும்.

'தத்தித்தத்தி நடந்து வரும் தங்கப் பாப்பா' எத்தனை தரமும் கேட்கலாம். 'நீ தான் செல்வம்', 'நீயும் பொம்மை நானும் பொம்மை' என்ற

(4-ம் பக்கம் பார்க்க)

உயிரற்ற அந்தப் 'பொம்மை' எஸ். பாலச்சந்தர் கையில் கிடைத்ததால் நல்லதொரு தமிழ்படத்தை ரசிகர்கள் பார்க்கக்கூடியதாக இருக்கிறது.

'பொம்மை' சாதாரண பொம்மையாகவெளியே அழகாக இருந்தாலும் உள்ளே தான் ஆபத்து. இந்தஆபத்துத்தான் மூன்று மணித்தியாலங்களையும் அலுப்புத் தட்டாமல் ஓடவைக்கிறது. அந்தப் பொம்மை, யார்யார் கையில் சிக்குகிறதோ அந்த நபர் அந்தப் பொம்மையை வீசமாட்டாரா என்பதுதான் ரசிகர்கள் கவலை. தமிழ் நாட்டு [illegible] நிமிடம்கூட மூடவிடமாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்பாண்டத் தொழில்

மண் தொழில் கலை: கண்ணுடி செய்தல், மட்பாண்டங்கள் செய்தல் என இருவகையாகப் பிரிக்கப்படுகிறது. ஆதிகால மனிதர்கள் மலைகளிலும் காடுகளிலும் அலைந்து கொண்டிருந்த பொழுது அவர்கள் மண்ணின் பயனை மெல்ல மெல்ல உணர ஆரம்பித்தார்கள். உணவுப் பண்டங்களைவேகவைக்கவும் பொருட்களை எடுத்துச் சேமித்து வைக்கவும் மட்பாண்டங்கள் தேவைப்பட்டன. அன்றைய மனிதன் எவ்விதக் கருவியின் உதவியையும் நாடாது கைகளினுலேயேமட்கலங்களை உருவாக்கினுன். அவன் அன்றுஇட்ட வித்துத்தான் இன்று வேரூன்றிப் பெருமரமாகக் கிளைத்து நிற்கும் மட்பாண்டக்கலையாக மிளிர்கிறது.

பூமியிலுள்ள பலரக மண்ணில் மட்பாண்டத் தொழிலுக்கு ஏற்றது களிமண். இது உலகின் பல பாகங்களில் பெருவாரியாகக் கிடைக்கின்றது. இது வெள்ளைக் களிமண், சாதாரண களிமண் என இருவகைப்படும். இக் களிமண் உறுதி பெறுவதற்குப் பலகலவைகள் சேர்க்கப்படுகின்றன. இதனுல் மண்ணுக்கு இயற்கையாகஉள்ள உறுதித் தன்மையை விட அதிகக்கெட்டித்தன்மை ஏற்படுகிறது. பொதுவாக மண் கலவையுடன் பெல்ஸ்பார், குவார்ட்ஸ் முதலிய உலோகச்சத்துள்ள மூலகங்கள் சேர்க்கப்படுகின்றன.

கிராமிய மட்பாண்டத் தொழிலாளர்கள் உபயோகிக்கின்ற களிமண் ஆறு, குளம், குட்டை, ஏரி, வாய்க்கால் போன்ற நீர்ப்பற்றுள்ள இடங்களில் எளிதாகக் கிடைக்கிறது. நீர்நிலையோரங்களில் சாதாரணக் களிமண்ணுகக் காட்சி தருகின்ற இதுதான், கண்ணுக்கும், கருத்திற்கும் அழகு தருகின்ற கவர்ச்சிப் பொருட்களாகவும், கவின் பெறு கலைப்பேழைகளாகவும் உருவாகிறது. அகழ்வாராய்ச்சியாளர்கள் இத்தகைய மட்பாண்டங்களிலுள்ள கலைத்திறனையும், சித்திர எழுத்துக்களையும் வைத்தே, பண்டைய நாகரிகத்தை நிர்ணயிக்கின்றனர்.

மட்பாண்டங்களைச் செய்வதில் பலமுறைகள் பின்பற்றப்படுகின்றன. அவை:

1. திரிவைத்தல் முறை அல்லது பிரிவைத்தல் முறை.

2. மனேதல்: மண்ணைச்சக்கரத்தில் வைத்துப் பாண்டமாக வனேதல்.

3. அடித்தல்: சிறு மரக் கட்டைக் கருவி கொண்டு தட்டி அடித்துப் பாண்டம் சமைத்தல்.

4. அச்சுகளில் செய்தல்: மண்ணை அச்சுகளில்வார்த்து உருவமைத்தலே அச்சுமுறையாகும்.

திரிவைத்தல்:- திரிவைத்தல் அல்லது பிரிவைத்தல் என்ற முறையில் தண்ணீர்த் தொட்டிகள், பூந்தொட்டிகள், குதிர்கள், சிலைகள் முதலியன தயாரிக்கப்படுகின்றன. இம்முறையில் பாத்திரங்களின் பரப்பு ஒழுங்காகவும், சீராகவும், அழகாகவும் இருக்காது இம்முறைதான் முதன்முதல் தோன்றிய . சாதாரணமாக, வைக்கோல் கூழத்தை மண்ணுடன் கலந்து தொட்டிகள், குதிர்கள் செய்வதைப் பார்த்தவர்கள் இதை இலகுவில் புரிந்து கொள்ளலாம்.

மனேதல்: இதை வனேதல் என்று சிலர் சொல்லுவார்கள். சக்கரத்தில் மண்ணைவைத்து அதைச் சுழற்றிவிட்டுக் கையால் ஒரே அழுத்தில் வார்த்தெடுத்து, அளவுக்குத் தக்க விதத்தில் உருவத்தை அமைக்கும் முறைக்கு மனேதல் அல்லது வனேதல் என்று பெயர். இம்முறை மூலம் வட்டவடிவமும், முட்டைவடிவமுமாக உள்ள பண்டங்களை மட்டுமே செய்ய முடியும். பொதுவாகச் சமையல் பாத்திரங்கள் இம்முறையால் உருவாக்கப்படுகின்றன.

அடித்தல்: இம்முறை எளிதானது. பரவலாக எல்லா இடங்களிலும் நடைபெற்று வருகின்றது. பக்குவப்படுத்தப்பட்ட களிமண்ணைப் பாண்டமாக வனேவதற்குச் சக்கரம், பலகை, வழவழப்பான கல் ஆகிய மூன்றும் வேண்டும். தேவையான களிமண்ணை சக்கரத்தின் மத்தியில் வைத்துச் சுற்றிக் கையால் உருவத்தை உண்டாக்கி உட்புறத்தை வழவழப்பான கல்லாலும், வெளிப்புறத்தைக் கட்டையாலும் தட்டிப் பெரிதாக்கிப் பாத்திரங்களாக்கும் முறைக்கு அடித்தல் முறை என்று பெயர். இம்முறை மூலம் அதிகமாகச் சமையல் பாத்திரங்களே செய்யப்படுகின்றன. பாத்திரங்களின் கழுத்தடியில் காணப்படும் கோடுகளை சக்கரத்தில் மெல்லச் சுழற்றி நகத்தால் மண்ணைக் கீறுவதின் மூலம் உண்டாக்குகின்றனர்.

அச்சு: அச்சுகளின் உதவியால் பொருட்களைச் செய்வது மிகவும் எளிது. பல வகையான உருவங்களை உண்டாக்கப் பலரக அச்சுக்கள் நிரந்தரமாகச் செய்யப் படுகின்றன. இம்முறையில் மட்பாண்டங்களை உருவாக்க அதிக அளவுதொழில் ஞானமோ, நுணுக்கத் திறனே, கைவன்மையோ தேவை இல்லை என்றே சொல்லலாம்.

மண், சிமெந்து, கல்நார், மரக்கட்டை முதலியவற்ருல் செய்யப்பட்ட அச்சுகளில் மண்ணை வார்த்து உருவத்தை உண்டாக்குகின்றனர். பெரும்பாலும் கிராமங்களில் செங்கல் அறுப்பதற்கு மர அச்சுகள் பயன்படுத்தப்படுகின்றன. நாகரிகம் வளர்ந்தோங்கியுள்ள இந்நாளில் பொம்மைகள், குவளைகள், காப்பிக்கோப்பைகள் முதலியன அச்சுகளில் செய்யப்படுகின்றன.

உடல்நலன்பேணும்

மட்பாண்டச்சமையல்

சுடப்பட்ட மட்பாண்டங்களில் நுண்ணிய துவாரங்கள் உண்டு. எனவே, இப் பாண்டங்களில் திரவப் பொருளை இட்டால் கசியும். ஆனுல் சமையல் செய்வதற்கு இத்தகைய பாத்திரங்களே சிறந்தவை. கிராமங்களில் இன்றும்மட்பாண்டங்கள்தாம் சமையலுக்குப் பயன்படுத்தப் படுகின்றன. நகரமக்கள் துருஏரு எஃகுப் பாத்திரங்களை இப்போது பெருமளவு உபயோகிக்கின்றனர். மட்பாண்டத்தொழிலின் வளம் குன்றுவதற்கு இதுவுமொரு காரணம்என்ருல் மிகையாகாது.

சுகாதார நெறிப்படி மட்பாண்டம்சிறந்த தென்ருலும்திரவப்பொருட்களையும் உப்புப் பொருட்களையும் தேக்கிவைக்கும்போது விரைவில்வலுவிழந்து பொருட்களையும் நசித்துப்போகச்செய்கிறது. இக்குறைகளை நீக்கும் பொருட்டு பலவழிகள் கையாளப்பட்ட போதிலும் முற்றிலும் தவிர்க்க முடிவதில்லை,

சிறுவர் தொடர்கதை

## கீதா விலாஸ்

கு. ராதா ரமணன்

(7)

கடற் கன்னிகள் சாம்ராஜ்யத்தில் கைலஞ்சம் புகுந்த விதத்தைக்கேட்கும் போது ரமேஷுக்கு ஒரே சிரிப்பாக இருந்தது பூலோக சபையில் மந்திரியாகஇருந்த ஒருவன் இவர்களது அரசில் மந்திரிப்பதவி ஏற்றபோது லஞ்சம் என்ருல் என்ன என்ற விஷயம் இங்கு தெரிய வந்ததாம். அந்த மந்திரிக்கு இங்கு இடம் கிடைத்த விதமே ஒரு விசித்திரம் தான்.

மிஸ்டர் எமதர்மராஜா ஒருநாள் பூலோகத்திற்கு விஸிட் செய்துவிட்டுத்திரும்பும்போது தனது 'லொறி' யில் பலரை ஏற்றிக்கொண்டு போனுராம். (குறிப்பு: முன்னர் எல்லாம் மிஸ்டர் எமன் தனது எருமைக்கடாவில் வந்துதான் மனிதர்களை ஏற்றிக்கொண்டு செல்வதுவழக்கம். ஆனுல் எதிர்பாராத விதமாக அதாவது எருமைக்கடாவை 'பிறேக்' இல்லாத இ. போ. ச. பஸ் அடித்துவிட்டதால் அவர் இப்போதோர் 'நியூ மோடல்' பென்ஸ் லொறி ஒன்று வாங்கி இருக்கிருர்). அன்றைக்கு லொறி சரியான 'ஓவர்லோட்!' இதன் விளைவாக 'ஸ்பிறிங்' ஒன்று தெறித்து லொறி புரண்டு போய்விட்டது. புரண்டது தான் புரண்டது. வேறு எங்காவது புரண்டிருக்கலாகாதா? கடற்கன்னிகள் ராஜ்யத்தின் எல்லையில் 'லொறி' புரண்டதுதான் தாமதம், லொறியில் சென்ற நரகலோகக் கைதிகள் எல்லோரும் இவர்களின் எல்லைக்குள் தப்பி ஓடிவிட்டார்கள். கடற்கன்னிகள் ராஜ்ய சட்டப்படி எமலோகத்தின் எந்தப்பிரஜைக்கும் அவர்களின் எல்லைக்குள் பிரவேசிப்பதற்கு அதிகாரமில்லை. யார் யாருக்கோ எல்லாம் 'பந்தம் பிடித்து' நரகலோகக் கைதிகளில் ஒருவன் இங்கு மந்திரியாகிவிட்டான். அதன் பின்னர் மந்திரிசபை பூராவுமே ஒரே ஊழல்.

இவையாவற்றையும் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்த ரமேஷ் தான் விஞ்ஞானிகளின் தலைவனை காண விரும்புவதாகத் தெரிவித்தான். வெளியே சென்ற தளபதி விஞ்ஞானிகளின் தலைவனுடன் அரைமணி நேரத்துள் திரும்புகிருன்.

விஞ்ஞானிகளின் தலைவனைப் பார்க்கும்போதே அவன் மிகவும் அகங்காரங்கொண்டவன்போல் தோன்றியது. ஏதோ தலைவன் என்ற கௌரவத்திற்காக ரமேஷ் கரங்களைக் கூப்பியும் அவன் அதையெல்லாம் சட்டை செய்யாது ஆண்மனை ஆசனத்தில் அமருகிருன். ரமேஷ் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டே பேசத் தொடங்குனுன்.

''நீங்கள் தானே விஞ்ஞானிகளின் தலைவன்''

''ஆமாம்! அதிலென்ன சந்தேகம்?

''எதற்காக நான் தங்களை அழைத்துள்ளேன் என்பதை அறிவீர்களா?,'

''அறிவதற்கு ஆவலாக உள்ளேன்!''

'நமது கடற்கன்னிகள் சாம்ராஜ்யத்தில் விஞ்ஞானம் மிகவும் முன்னேறியிருப்பதை எண்ணும் போது எனக்கு ஒரே அச்சமாக இருக்கிறது. விஞ்ஞானத்தை நீங்கள் ஆக்கவழியில் செலுத்தாது அழிக்கும் வழியில் உபயோகிப்பதை முன்னிட்டு நான்மிகவும் வருந்துகிறேன். இன்றிலிருந்து நம் நாட்டில் இருக்கும்அத்தனை விஞ்ஞான கூடங்களும் சமுதாய விரோத ஆராய்ச்சிகள் எதிலுமே ஈடுபடக்கூடாது. இது என் கண்டிப்பான நிபந்தனை. இதை மீறுபவர்கள் சிரச்சேதம் செய்யப்படுவார்கள்...!

ரமேஷ் ஒரு குட்டிப் பிரசங்கம் செய்துவிவிட்டான். விஞ்ஞானிகளின் தலைவன் எவ்வித பதிலுமே கூறவில்லை ஒரே மௌனம்! ஆத்திர மிகுதியில் கண்கள் சிவப்பாகின்றன. மீசை படபடவெனத்துடித்தது. ஆணவத்திமிரில்எதுவுமேபேசாது வெளியேறுகிருன், விஞ்ஞானிகளின் தலைவன். அடுத்த கணம் ''மன்னு எம்மை நீதான்காப்பற்றவேண்டும்'' என அலறிக்கொண்டே ரமேஷின் கால்களில் விழுகிருர் ஒரு வயது முதிர்ந்த கிழவர்.

(தொடரும்)

## சிறுவர் பூங்கா





கவிஞர் இ. நாகராஜனின் 'நிறை நிலா' சிறுகதைத் தொகுதி அண்மையில் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் திரு. இராஜ. அரியரத்தினம் தலைமையில் நடைபெற்றபோது வெளியீட்டாளரான இளம் எழுத்தாளர் திரு. கு. ராதா ரமணன் நன்றியுரை கூறுகிருர். அமர்ந்திருப்பவர் வரவேற்பாளர் பிரம்மஸ்ரீ சி. சுப்பிரமணிய ஐயர்.


ராக்ரர்களுக்கு . . .

ராக்ரர் உறுப்புகளுக்கு . . .

இன்னும்

ராக்ரர் றிப்பயர்களுக்கு

ராஜா கோப்பரேஷன்

பரந்தன்


## சோலை!

— நோ. மணிவாசகன் —

உள்ளங் கவர் சோலை - அது
எழில் மிகுந்த சோலை!
புள்ளி மான்கள் துள்ளி - மேயும்
பூமணக்கும் சோலை!

ஃ

தென்றல் வீசும் சோலை - புதுத்
தேன் பளிக்கும் சோலை!
வண்ண மயில் ஆடும் - கவின்
வண்ண மலர்ச் சோலை!

புள்ளினங்கள் பாடும் - தேன்
பழமுதிர்க்குஞ் சோலை!
மன மயக்கம் நல்கும் - நறு
மணமளிக்கும் சோலை!

ஃ

பாட்டளிக்கும் சோலை - அது
பயனளிக்கும் சோலை!
வாட்டமுற்ருேர் தமக்கு - நல்
வளமளிக்கும் சோலை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளி பிறந்தது

— எஸ். சண்முகநாதன் —

கனத்த பெருமழை பெய்யும் போல் வானம் இருண்டு கொண்டிருந்தது. அவசர அவசரமாக மாலைப்பூசைக்கான பூவைப் பறித்துக் கொண்டு வந்து உள் வீட்டில் மேசை மேல் வைத்து விட்டுத் திரும்பி வந்த அவளின் நிமிர்ந்த பார்வையில் அவன் பட்டான். ஏதோ நுழையக்கூடாத இடத்தில் நுழைந்து விட்டதைப் போன்ற கூச்சத்துடன் அவன் வீட்டின் விறாந்தையில் தூணுடன் தூணாய் ஒதுங்கிப்போய் நின்றான்.

அவள் பார்த்துக் கொண்டே நின்றாள். வாழ்வில் இத்தனை காலமும் மறந்து போயிருந்த ஒன்று அன்று நினைவு வந்துவிட்டதைப் போன்று அவள் அவன் மீது தேக்கிவிட்ட பார்வையை ஒதுக்கி விடாமல் அப்படியே நின்றாள். அவன் முகம் பரிதாபமாகத்தான் இருந்தது. ஆனாலும் இதய வேகத்தின் ஒரு ஒளியும் உறுதியும் அந்த முகத்திலும் விழிகளிலும் தெரியத்தான் செய்தது.

பார்த்துக் கொண்டே இருந்த அவளின் விழிகள் கலங்கின. என்றோ காய மேற்பட்டுக் காலத்தின் போக்கில்மாறிப்போயிருந்த நெஞ்சத்தின் புண்ணில், அன்று தாங்க முடியாத வலியெடுப்பதை அவனைக் கண்டவுடன் அவள் உணர்ந்தாள். வெம்பி வேதனைப்பட்டு மரத்துப் போயிருந்த உள்ளத்தில் அவனைக் கண்டவுடன், கல்லில் ஊற்றாய் ஏதோ சுரப்பதை அவள் உணர்ந்து நெகிழ்ந்துபோய் நின்றாள்.

இருவரிடையேயும் நிலவும் அமைதியைக் குளிர்ந்த மழைக்காற்று கலைத்துக் கொண்டிருந்தது.

குமரேசன் அன்பும் பாசமும் பெருகும் விழிகளால் அவளைப் பார்த்தான். அவள் தொடக்கூடாத ஒன்றைத் தொட்டுவிட்டு நெஞ்சில் பெருகும் அருவருப்புணர்வால் முகம் சுளித்து விலகி நிற்கும் குழந்தை போன்று விலகிநின்றது அவனுக்கு நெஞ்சில் ஈட்டி செருகுவது போல் வேதனையாகத்தான் இருந்தது. ஆனாலும் வேதனைப் படுவதற்கும் வருத்தப் படுவதற்கும் தனக்கு அதிகாரம் இல்லையென்பதும் அவனுக்குத்தெரியும்.

''சும... தி...'' அவன் அமைதியாய் அழைத்தான்.

சுமதி நிமிர்ந்து பார்த்தாள். அந்தப் பார்வை என்ன என்பது போல் அலட்சியத்துடன்தான் அவனைத் தாக்கியது. ஆசை காட்டி, நெஞ்சிலே கனவுகளையும், பசுமையான நினைவுகளையும் புது வாழ்விலே ஒரு வெறியையும் ஊட்டிவிட்டு நடந்துவந்த பாதையில் தனித்து விட்டு ஓடிப்போன அவனை அவளால் அப்படித்தான்பார்க்க முடியும் அன்பாய், ஆசையாய் பார்க்கவேண்டுமென்று நினைத்த போதும் ஏனோ கடந்த நான்கு வருடங்களாக அழுதழுது கண்ணீர் வற்றிப்போன கண்களில் அலட்சியமும், கோபமும்தான் பொங்கிக்கொண்டிருந்தது.

''சுமதி... என் மேல் ... கோபமா...?''

அந்நியன் போல் தூர விலகிநின்று கொண்டு அழைப்பது அவனுக்கும் என்னவோ போல் தான் இருந்தது. கழிந்துபோன காலத்தின் பசுமையான நினைவுகள் அவன் உள்ளத்தில் பசுமையாய்க் கொழித்துக் கிடந்தன. அந்த நாட்களில் அவள் இப்படியா விலகிநிற்பாள்? ஓடிவந்து தன் நெஞ்சைப் பூமாலையாய் அலங்கரித்து மனதில் மணமாய்க் கமழ்ந்தது அவனுக்கு நினைவிற்கு வந்தது. பெருமூச்சுடன் கைகளைப் பிசைந்துகொண்டான்.

''சுமதி ... என்னைப் பார்க்கவே மாட்டாயா...?''

வேதனையில் அவனுக்குக் குரல் அடைத்துக் கொண்டது. நான்கு வருடங்களாகத் தான் செய்துவிட்ட பாவத்திற்காக நம்பியவளை நடுவழியில் விட்டு ஓடிவந்த குற்றத்திற்காக நெஞ்சில் நினைத்து நினைத்து வருந்தி அதன் பயனாக அல்லவா அவன் அவளைத்தேடி ஓடி வந்திருக்கிறான்? அதனை உணர்ந்து கொள்ளாமல் என்றுமே பார்த்திராத அந்நியனைப்போல தன்னை அலட்சியத்துடன் நோக்குவதை அவனால் தாங்கவே முடியவில்லை.

''அவ்வளவு பாவம் செய்து விட்டேனா...? சுமதி ...உனக்கு இழைத்து விட்ட துரோகத்திற்காக இத்தனை காலமும் வருந்தி அழுதழுது வற்றிப்போன கண்களும் உடைந்துபோன உள்ளத்துடனுமல்லவா ஓடிவந்திருக்கிறேன் ...''

அவளுக்கு அந்த வார்த்தைகள் நெஞ்சில் ''சுரீர்'' எனச் சுட்டது. அவளின் அலட்சியம் மிகுந்திருந்த பார்வையில் வேதனை கவிந்தது, துயரம் குழைந்தது. சுமதிக்குக் கழிந்து போன நாட்கள் எல்லாம் ஓர் இனிமையான கனவாய்த் தோன்றிற்று. அந்த நாட்களில் இருவரும் காதல் எனும் இனிமையான நினைவிலும், பசுமையான கனவிலும், சிங்காரக் கற்பனைகளிலும் மூழ்கி இருந்த காலத்தில் அவன் இப்படி உள்ளம் கசந்து பேசவிட்டிருப்பாளா? மழைமேகமாய் இருண்டிருக்கும் முகத்தைப் பார்த்தே வாடிப்போயிருக்கும் உள்ளத்துக் கவலையைத் தனது இதழ்களில் நெளியும் புன்சிரிப்பால் ஒற்றி எடுத்து விடமாட்டாளா?

சுமதி அவனை ஆதரவுடன் பார்த்தாள். எவ்வளவு மாறிப்போய்விட்டான். உலகத்தின் கள்ளம் புகாத வெள்ளை உள்ளத்தின் பிரதிபலிப்பாய் என்றும் மலர்ந்து கொண்டிருக்கும் முகம்தானா அது? வாழ்வின் பலமான அடிகளைப்பெற்று வாடிப் போய்விட்டானா அவன். அவளுக்குத்தெரியும் வாழ்வின் எதிர்காலத்தை -அதன் சுமையைக் கண்டுபயந்துஓடி விட்ட அவனை மனச்சாட்சி என்றும் சும்மா இருக்க விடாதென்பது. சில கணத்தில் ஏற்பட்ட வெறுப்பினாலும், வேதனையினாலும் அவன் ஓடிவிட்ட போதும் காலத்தின் போக்கில் தன்னை உணர்ந்து, மனச்சாட்சிக்கும் மதிப்புக் கொடுத்து என்றாவது ஒருநாள் புது மனிதனாகத் தன்னைத்தேடி ஓடி வருவான் என்றுதான் அவள் இவ்வளவு காலமும் காத்திருந்தாள்.

குமரேசன் அவள்மெளனத்தைத் தாங்கிக் கொள்ள முடியாதவனாக மீண்டும் கேட்டான்,

''சுமதி... என்னை முற்றாகவே ஒதுக்கிவிட்டாயா...?''

அவள் நிமிர்ந்து பார்த்த போது விழிகள் கலங்கிக் கண்ணீரில் பளபளப்பதை அவன் கண்டான். அவனுக்குத் தெரியும், அவள் தன்னை வெறுக்கமாட்டாள் என்பது. வெறுக்கவும் அவளால் முடியாது. சுமதி தன் நெஞ்சில் ஒரு தெய்வத்திற்குத்தான் கோவில் கட்டி வைத்திருந்தாள். அதிலே அவன் தான் என்றும் இருந்தான். நாலு வருடங்களாக அவனைக் காணவிட்டபோதும், தன்னை மறந்து ஓடிவிட்டபோதும் அவள் அவனைத்தான்பூசித்து வந்தாள். நெஞ்சத்தாலும் நினைவாலும் அவனுக்கே அடிமையாய் இருந்தாள்.

வெளியே மழை தூற்றலுடன் பெய்யத்தொடங்கியது.

அடிக்கும் குளிர் காற்றில் சிலிர்த்துக்கொண்டு நின்ற அவன் மீது தூவானம் விழுவதைக் கண்டு அவள் அதற்காகத் துயரப்பட்டாள். சுமதி அவனை அலட்சியம், கோபம் எதுவுமே இல்லாமல் பார்த்தாள். வணங்கும் தெய்வம் அவளைத்தேடி வந்திருக்கும்போது அலட்சியப்படுத்தலாமா? கடந்த நாலு வருடங்களாகத் தந்தையின்பேச்சிற்கும், தாயின் முகச்சுளிப்பிற்கும் ஆளாகிக் கொண்டு, அவன் தன்னைத் தேடிவரும் அந்த ஒரு நாளுக்காக அல்லவா காத்திருந்தாள்.

அந்த நாள் இன்றுதான் விடிந்ததா?

அவளுக்குக் கண்ணீர்பெருகிக் கன்னங்களில் வழிந்தது, அந்தக் கண்ணீர்த் துளிகளை நிலத்தில் சிந்திவிடாமல் அவனின் காலடியில் அர்ப் [illegible] அவளுக்கு ஓர் உணர்வு சிலிர்த்தது. உள்ளத்தில் பெருகும் அன்பில், பாசத்தில், காதலில் அவள் தன்னையே இழந்து மூழ்கிக் கொண்டிருந்தாள். அவளுக்குக் கை கொடுக்க அவனால்தான் முடியும். அதற்காகத்தான் அவள்காத்திருந்தாள்.

வெடிக்கும் வேதனையில் விம்மல்களுடன் அவள் ஓவென்றுபெருகும் அழுகையுடன் தாயைக்கண்ட குழந்தையாய் அவன் காலடியில் விழுந்து அழுதபோதுஅவளை ஆதரவுடன் அள்ளியெடுத்து அணைத்துக் கொண்டான். அந்தச் சுகம் அவளுக்கு ஆனந்தமாய் இருந்தது. குமரேசன் அவள் கண்ணீரைத் துடைத்துவிட்டான்.

''சுமதி.. நான் என்னையே உணர்ந்துகொள்ள இந்த நாலுவருடம் தேவைப்பட்டது. அன்று உன் அப்பா கேட்டாரே... பணம்... உத்தி

ஞாயிறு கதை மலர்

யோகம்...செல்வாக்கு, அது எல்லாம் இப்போது என்னிடம் இருக்கிறது.

அவன் அவளை அணைத்தபடி அமைதியாய், ஆனால் உறுதியுடன் சொன்னான். இப்போது சமூகத்தின் கேள்விகளுக்குப் பதில்சொல்லத் தெரியாத குழந்தை இல்லை, அவன். நெஞ்சத்தின் ஒளியும், உறுதியும் முகத்தில் பிரகாசித்தன.

சுமதி அவன் அணைப்பில் இருந்து விலகிநின்றுகொண்டு அவனுக்குச்சொல்லுவது போல்உலகத்திற்கும் சொன்னாள்:

''அன்று அப்பா சொன்னதுபோல் நானும் குழந்தையில்லை.. விரும்பியவாழ்வைத் தேடிக்கொள்ள எனக்கும் வயது வந்துவிட்டது. இன்று நாம்அப்பாவிற்குமட்டுமல்ல உலகத்திற்குமே பயப்படத் தேவையில்லை...''

அவன் எதிரே சிரித்துக் கொண்டு நின்றான். அந்த மல்லிகை மலர்வதுபோன்ற சிரிப்பு, அவளுக்கு நான்கு வருடத்திற்கு முந்திய ஒரு நாளை நினைவுக்குக்கொண்டு வந்தது.

(2)

அன்று அந்த இரவு அழகாகத்தான்மலர்ந்திருந்தது. வானத்தின் கோடியில் பின் நிலவு மங்கலாய் ஒளிவிட்டுக் கொண்டிருந்தது. அவள் நெஞ்சத்தின் எண்ணற்ற கனவுகளைப் போலவே நட்சத்திரங்களும் கோடிகோடியாய்ப் பூத்துச் சிரித்துக்கொண்டிருந்தன.

வீடு அமைதியில் ஆழ்ந்திருக்கும்போது அவள்மட்டும் தவிக்கும் நெஞ்சுடன் பின்புறம் வாழைகள் அடர்ந்த கிணற்றடியில் அமைதி இழந்து மனம்பரபரக்கஉட்கார்ந்திருந்தாள். அன்று அவளுடைய வாழ்விலேயே பொன்னான நாள். அந்தப் பொற்காலத்திலே அவள்மனதுக்கு இசைந்தவனுடன் புதுவாழ்வைத்தேடிப்போகப் புறப் பட்டுத்தயாராகஇருந்தாள்.

வாழைகளின் மறைவில் இருந்து குமரேசன்வெளியே வந்து அவளின் அருகேநின்றவுடன் அவள் ஆவல் பெருகும் விழிகளால் நிமிர்ந்து பார்த்தாள். அந்த விழிகளில் ஆனந்தம் மலர்ந்து கொண்டிருந்தது; கூடவே கலக்கமும் கலந்திருந்தது.

சுமதியின் கலங்கிய கண்களைக்கண்ட அவன் கேட்டான்: ''ஏன் சுமதி அழுகிறாய்...... இவனை நம்பிப்புறப் பட்டுவிட்டோமே...... எதிர்காலம் எப்படி இருக்குமோ என்றுதானே கண்கலங்கிக் கவலைப்படுகிறாய்....''

அவள், அவன்இதழ்களில் விரல் பதித்துஅழுத்தினாள். அதிலே அவளின் உறுதியும் வேகமும் கூடத்தான் தெரிந்தன.

''குமரேசன்...என் வாழ்வின் இன்பத்தையும் துன்பத்தையும்...ஏன் என்னையே உங்களுக்குத் தந்துவிட்ட போது......எதிர்காலத்தைப் பற்றி நான் ஏன் கவலைப்பட வேண்டும்?

அவளின் உறுதி மிகுந்த வார்த்தைகளால்அவன் உள்ளம் சிலிர்த்தது. எதிர்காலம் அப்போது அவன் கண்களுக்குக் கனவுலகமாய்த் தெரிந்தது. தான் கனவுகண்டுகொண்டிருக்கும் லட்சிய வாழ்க்கை அவன் கண்களுக்குத் தூர இருப்பதாய்த் தோன்றிற்று. ஆனாலும் அவன் கவலைப்படவில்லை. எத்தனை தூரமானாலும்அவனை அடைவதற்கு வழித்துணையாய் அவள் வரும்போது அவன் ஏன் கவலைப்படவேண்டும்?

சுமதி அமைதியாக அவனைப்பார்த்தாள். அவன் அவள் கண்களுக்கு லட்சிய புருஷனாய்த் தோன்றினான். வறுமையான குடும்பத்தில் பிறந்தாலும், அமைதியான வாழ்க்கையின் பொலிவுடன் திகழ்ந்தான். தன் குடும்பத்தின் நிலைக்கும், அவன் நிலைக்கும் ஏணிவைத்தாலும் எட்டாது என்பது அவளுக்குத்தெரியும். ஆனாலும் காதல் கண்ணை மறைத்துக் கொண்டிருக்கும்போது தானே அவனுக்கு அடிமையாய், அற்பமான பொருளாய் அவளும்உணர்ந்தாள்.

குமரேசனின் ஏற்பாட்டின்படி அவள் ஒன்றுமே எடுத்துக்கொள்ளாமல் நகைகளாக மட்டுமே அணிந்திருந்தாள். பதினாறுவயது நிலவைப்பழிக்கும் முகத்தில் நீண்ட விழிகளும், துருதுருத்த பார்வையுடனும் அவளைக்கண்டபோது அவனுக்கு உடலும், உள்ளமும் சிலிர்த்தன. நிலவொளியில் அவள் சிலையாய் நின்றாள்.

அவன் நிலவு வெளிச்சத்தில் கைக் கடிகாரத்தைப் பார்த்தான். நேரம் நள்ளிரவைத் தாண்டிக்கொண்டி

(8ம் பக்கம் பார்க்க)

உத்தரவாதத்துடன்

பழைய டயர்களைப் புதுப்பிப்பதற்கும்
திறமான றப்பர் பொருட்களை தொகையாக
பெறுவதற்கும்
மிகச்சிறந்த இடம்.

ஜெனரல் இண்டஸ்றீஸ் லிமிட்.,
அத்தியடி, யாழ்ப்பாணம்

காட்சி அறை:
20, ஸ்ரான்லி வீதி போன்: 7024

உங்கள் தேவை! எங்கள் சேவை!!

உஷாயர் கிறீக்கோ!! நூற்றுக்குநூறு சுத்தமான
உஷாயர் கிறீக்கோ கோப்பி
ஜோன் கிறீன் கம்பனியாரால்
உத்தரவாதத்துடன் தயாரிக்கப்பட்டது
நிறம் மணம் குணம் நிறைந்தது
நம்பிக்கையுடன் வாங்குங்கள்
தினமும் உல்லாசமாய் அருந்துங்கள்

ஜோன் கிறீன் அன்ட் கோ.,
86, வோல்ஸ் லேன், முகத்துவாரம்,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதை (7ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்தது. நிமிர்ந்து உறுதியுடன் பார்த்துச் சொன்னான்:

"சுமதி...... நீ உன்னையே உணர்ந்துகொள்ளாமல் வாழ்வின் எதிர்காலத்தை எண்ணிப்பார்க்காமல் — சில வினாடியில் ஏற்பட்ட வெறியால், வேகத்தால் என்னுடன் வந்துவிடாதே......"

அவள் அமைதியாகக்கலங்கிய கண்களுடன் கேட்டுக் கொண்டு நின்றாள்.

"இன்றையைப் போல் நாளை இருக்காது......இன்று நல்லதான முடிவு நாளை கெட்ட முடிவாக உன் கண்களுக்குத் தெரியும்... வாழ்வைப்பற்றிய ஒரு நிச்சயமான முடிவுடன்தான் நீ வர வேண்டும்..."

சுமதி தழ தழத்த குரலில் அன்பும், பாசமும் பெருகச் சொன்னாள்:

"நான் என்னையே உணர்ந்து கொண்டு வாழ்வைப்பற்றிய நிச்சயமானதொரு முடிவுடன்தான் வருகிறேன். கல்லும், முள்ளும் நிறைந்த பாதையானாலும் நீங்கள் துணைக்கு வரும்போது நரகத்திற்கு வேண்டுமானாலும் வருவேன்..."

அவனுக்கு கண்கள் கலங்கின. இதயத்தின் மென்மையான் உணர்வுகளைச் சில்லிடச்செய்தன அவள் வார்த்தைகள். உணர்வின் சிலிர்ப்பில் அவன் அவள் கைகளைப் பற்றிக்கொண்டான். அவைகள் ஏனோ நடுங்கின. சுமதி அவனின் நடுங்கிய கரத்தை எடுத்துத் தன் இதழ்களில் மென்மையாய் ஒற்றிக் கொண்டாள்.

"இந்தக் கரங்கள்தான் இனி எனக்குத் துணை..."

குமரேசனுக்குஅந்தவார்த்தைகள் வாழ்வின் எதிர்காலத்தை, சுமையை, பொறுப்பை ஞாபகப்படுத்தின. இவ்வளவு உறுதியுடன் தன்னை நம்பிவரும் அவளைக் கண்கலங்காமல் காப்பாற்றவேண்டும் எனும் உறுதியும் அவன் உள்ளத்தில் பிறந்தது.

"சுமதி, நேரமாகிவிட்டது புறப்படு..."

அவன் கூறிவிட்டு நடந்தபோது அவளும் கைகளைப் பிடித்தவாறே புதுவாழ்வில் காலடி எடுத்து வைத்துநடந்தாள். அப்போது நிலவு கருமேகத்துள் மறைய, பூமி இருண்டது. ஆனாலும் வாழ்வின்எதிர்காலத்தைப் போல வழி ஒளிமயமாய்த் தெரிந்தது.

நிலவு இருளிலிருந்து ஒளிக்கு வந்தபோது எதிரே அவளின் தந்தை சிவசாமி கோபமே உருவாய் நிற்பதை இருவருமே கண்டனர். அந்தக்கணத்தில் இருவருக்குமே உலகம் இருண்டது. குமரேசன் அச்சத்துடன் அவள் பற்றியிருந்த கையை இழுத்தான். அவள் அந்தப்பிடியிலிருந்து தன்னால் விடுபட முடியாதென்பது போல் இறுக்கமாகப்பற்றினாள்.

சிவசாமி எதிரே நடந்து வந்தார்.

அவரின்கண்கள்கோபத்தில் சிவந்துபோய்க் கோவைப் பழமாய்க் கனிந்திருந்தன. நிலவின் மங்கிய வெளிச்சத்தில் அவர் நிலையைக்கண்டவுடன் சுமதிக்குப் பயமாகவிருந்தது. ஏதோ நடக்கப் போகிறதென்ற உள்ளுணர்வால் கலக்கமடைந்தாள். பிணைத்திருந்த கையை விடுவித்துக்கொண்டு தந்தைக்கும், அவனுக்குமிடையே போய் அவர் முகத்தையே பார்த்துக்கொண்டுநின்றாள்.

அவர் ஒன்றுமே பேசவில்லை, கண்கள் தாம் சிவந்துகொண்டிருந்தன. சில நிமிஷ அமைதி நிலவியது. புயலுக்கு முன் தோன்றும் அமைதியாய்த் தோன்றியது அவளுக்கு. சிவசாமி உள்ளத்துள்பெருகும் கோபத்தில், தமது குடிப் பெருமைக்கு, செல்வாக்கிற்குப் பங்கம் வந்துவிட்டதே என்ற சுயநினைவில், மிருகமாய் மாறினார்.

எதிரே நின்ற சுமதியைத் தள்ளிவிட்டு அவன் மீது பாய்ந்தார். 'பளார்!' கன்னத்தில் ஓர் அறை விழுந்தது. அவன் அழவில்லை; அவள் தான் அலறினாள்.

"அப்பா..."

சிவசாமி கீழே விழுந்து கிடக்கும் மகளைப்பார்த்தார். உலகம் தெரியாத சிறுமியான அவளை அவன் ஏமாற்றிவிட்டதாய் அவர் நினைத்தார். எதிரே மழையில்நனைந்து குருவியாய்நடுங்கிக்கொண்டு நிற்கும் அவனைப் பார்த்துக் கத்தினார்.

"டேய்...என் பிள்ளையை நீ கெடுத்துப்போட்டாய்... உலகம் தெரியாத அவளை நீ ஏமாற்றவா பார்த்தாய்... நான் ஒருவன் இருக்குமட்டும் அது நடக்காது ... அவளுக்கு எத்தனையோ உத்தியோக மாப்பிள்ளை எல்லாம் பார்த்து வைத்திருக்கிறேன் ...... அவளையடைய உனக்கு என்ன தகுதியடா இருக்கிறது"

தகுதி உத்தியோகம் ...

குமரேசனுக்கு உலகம்சுற்றத்தொடங்கியது. சமூகத்தின் கண்கள் தன்னைவெறிக்கப் பார்ப்பதை உணர்ந்தான். அவர் கேட்டவற்றில் அவனிடம் என்னதானிருக்கிறது. இதயம்... பரிசுத்தமான இதயம். அது மட்டும் போதுமா...?

அவனுக்குக் கண்ணீர்பெருகியது. கோவெனக் கதறி அழுதான். உலகம் தன்னைப் பார்த்துச் சிரிப்பதாய் அவனுக்குப் பிரமை தோன்றிற்று. மேலே வானம்... கீழேபூமி ... இடையே எத்தனை தகுதிகள்! உயர்ந்த மனிதர்களிடையே சிறிய இதயங்கள். இளம் உள்ளங்களுக்கு எத்தனை தகுதிகள்-

அவன் தலை சுற்றியது. குமரேசன் நடக்கத் தொடங்கினான். அவன் கண்களுக்கு எதிரே நிற்கும் அவரோ... கீழே கிடக்கும் அவளோ ஒருவரும் தெரியவில்லை. அது எங்கோ சூன்யத்தில் நிலைத்திருந்தது. பார்வை அவர் கேட்ட தகுதி, உத்தியோகம், அவளைத் தேடித்தூர விரிந்திருந்தது.

சுமதி நீர்பெருகும் விழிகளால் குமரேசன் வெறியுடன் நடந்துபோவதைப் பார்த்து திகிலடைந்து நின்றாள்.

## (3)

பழைய நினைவிலிருந்து மீண்டுஅவள் தலை நிமிர்ந்தபோது அவன் முன்னைப் போலவே தூவானத்தில் நனைந்துகொன்டு ஒதுங்கி நின்றான். அது அவளுக்கு என்னவோபோல் இருந்தது.

"இப்படி உட்காருங்களேன்..."

அவள் முன்னால் கிடக்கும் கதிரையை எடுத்து அவனருகே போட்டாள்.

நாலு வருடங்களாய் மறைந்துபோன-இதயத்தை விட்டு விலகிப்போயிருந்த சந்தோஷம் மலர்ச்சி யாவும் அவளிடம் வந்து புகுந்துகொண்டன. அவள் சிட்டாய்ச் சிலிர்த்துக் கொண்டாள். குமரேசன் கதிரையில் அமர்ந்து இமைகொட்டாமல் அவளையேபார்த்துக்கொண்டிருந்தான்.

எவ்வளவோ மாறி இருந்தாள் அவள். முன்பெல்லாம் பொன்னிறமான அவள் நிறம் இப்போது கறுத்து உடல் இளைத்துப் போயிருந்தது. வாழ்வின் இருண்ட பகுதியில் கிடந்து கடந்த நாலுவருடங்களாகத் தவித்ததற்கு அடையாளமாக முகம்வாடி இருண்டுபோயிருந்தது. அவனுக்கு அவளைப் பார்க்கப் பார்க்க நெஞ்சில் இரக்கம் சுரந்தது.

உள்வீட்டில் அறையில் இருந்து யாரோ இருமலில் அடைத்துக் கரகரக்கும் குரல் கேட்டது. அவன் எட்டிப்பார்த்தான். சுமதியின் தாயார்தான் கட்டிலில் கிடந்தாள். குமரேசன் எதிரே நிற்கும் சுமதியை நிமிர்ந்து பார்த்தான். அவள் அவன் பார்வையைப் புரிந்துகொண்டு பதில் சொன்னாள்:

"இரண்டு வருடமாகவே இப்படித்தான்தீராத நோய். அதைவிட கண்பார்வையும் தெரியாது... நான் தான் கவனித்துக் கொள்ளவேண்டும்..."

அவள் கண்கள் பனித்தன. அந்த நிலைக்கு வருந்தியவளைக் குமரேசன் அனுதாபம் படர்ந்த விழிகளால் நோக்கினான்.

சுமதி உள்ளே போனாள். இருமலில் மூச்சடைத்துக் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த தாயாருக்கு நீர் பருக்கினாள். நெஞ்சை இதமாகத் தடவி விட்டாள். அப்போது அம்மா கேட்டாள்:

"யாருடன் கதைத்துக் கொண்டிருந்தாய்... வெளியே குரல் கேட்டதே..."

"அது அவர்தான்... குமரேசன்..."

தாயார் ஒரு கணம் நிலைகுலைந்தாள். ஆயிரம் இடிகள் தாக்கியதுபோல் உடல் சிலிர்த்தாள்.

"யார், அவனா?"

சுமதி தைரியமாய்ச்சொன்னாள்:

"ஆம் அவரேதான்... என் வாழ்க்கைக்கு வேண்டியவர். அவர் ஒருவரால் தான் என்வாழ்க்கை மலர முடியும்..."

தாயார் வாயடைத்துக் கேட்டுக் கொண்டிருந்தாள். அவளுக்கு கடந்த காலத்தின் கசப்பான சம்பவங்கள் நினைவிற்கு வந்தன. அந்த நினைவே அவளுக்கு வேதனையைக் கொடுத்தது. முன்பெல்லாம் வீடு எத்தனை கலகலப்புடன் இருக்கும். சுமதிதான் எப்படிச்சிரித்துக் கலகலப்பாக நாளொரு உடையுடன் மகிழ்ச்சியாக இருந்தாள். எல்லாம் நாலு வருடமாக இல்லாமல்போய் விட்டது.

ஒட்டி இருந்த இதயங்கள் தூரவிலகிப்போவதை அவள் அறிவாள். தாயும் மகளுமாக இருந்தபோதும் ஏதோ அந்நியர்கள் போன்று எதிரே [illegible] விலகி விலகிப் போனதை அவள் இன்னும் மறந்துவிடவில்லை. யாரால் ஒளிபெறும் என்று நினைத்தார்களோ அவளாலேயே வீடு இருண்டு போனபோது தானும் கணவரும் அவளைப்பேசிய பேச்சுக்களையும், பேசாமல் மௌனமாய்க் கண்களாலேயே கொன்ற கொடுமைகளையும் அந்தத்தாய் இப்போது எண்ணிப்பார்த்தாள்.

அவ்வளவு கொடுமைகளையும் ஏற்றுக்கொண்டு சுமதி யாருக்காகக் காத்திருந்தாள்?

"ஏனம்மா... நீ ஒன்றுமே பேசுகிறாயில்லை... நான் அடைய வேண்டிய வாழ்வு என்னைத் தேடி வந்திருக்கிறதம்மா இந்த வாழ்வை, சந்தர்ப்பத்தை விட்டு விட்டால் இனி எனக்கு வாழ்வே இல்லையம்மா...?"

அவள் குரல் உணர்ச்சியில் தழதழப்பதைத் தாய் உணர்ந்தாள். கண்கள் தாம் இருண்டு ஒளியில்லாதுபோய் விட்டன. உள்ளத்திற்குக் கண்களில்லையா? கைகளை உயர்த்தித்தடவியபோது சுமதி அந்தக் கைகளைப் பற்றிக்கொண்டாள்.

"நீ ஏன் சுமதி அவனையே நினைக்கிறாய்-விரும்புகிறாய்... உலகத்தில் எத்தனையோ பேர் நமக்குக்கிடைப்பார்களே... அவன் ஒருவன்தானா ஆண்பிள்ளை..." என்று தாய் கேட்டபோது சுமதி அடைக்கும் குரலில், வெளியே தன்னையே பார்த்துக்கொண்டிருக்கும் அவனையே பார்த்துக்கொண்டு சொன்னாள்:

"உலகத்தில் எவ்வளவோ பேர் கண்களுக்குப் பிடித்தவர்களாக இருக்கலாம்... ஆனால் மனதிற்குப் பிடிக்க வேண்டாமா? பெண்ணின் இதயத்தில் ஒருவனுக்குத்தான் இடமுண்டு... அவனை அடைய முடியாதபோது அவனின் நினைவிலேயே அழிந்து விடுவது தானேயம்மா பெண்ணுக்குப் பெருமை..."

தாய்க்கு உடல் சிலிர்த்தது. எத்தனை பெரிய உண்மையைச் சொல்லிவிட்டாள் அவள்? கல்பகோடி காலமாக தமிழ்ப் பெண்களின் இரத்தத்தில் ஊறிவிட்ட உண்மையல்லவா அது? ஏதோ மனதில் ஏற்பட்டுவிட்ட உறுதியுடன் நிமிர்ந்தாள். இருண்ட விழிகளிலிருந்து முத்தாய்நீர்த்துளிகள் உருண்டன.

"சுமதி, நீ கொடுத்து வைச்சவ.. வாழ்வில் ஒருவனையே நினைத்து அவனுக்கே வாழ்க்கைப் படுவது எவ்வளவு பெரிய பாக்கியம்... எத்தனையோ பெண்கள் யாரையோ நினைத்து யாருக்கோ மனைவியாக வாழ்கிறார்கள். அது உண்மையான வாழ்க்கை இல்லையம்மா... நீ...நீ..."

உணர்ச்சிச் சுழிப்பில் வார்த்தைகள் அடைபட்டுத் தவித்தபோது, சுமதி தாயை அணைத்தபடி "நான் அப்படித்தான் வாழப்போகிறேன்" என்றாள்.

## — 4 —

வெளியே பெருமழை ஓய்ந்து தூறிக்கொண்டிருந்தபோது சிவசாமி தூற்றலில் நனைந்தபடியேஉள்ளே நுழைந்தார். "சீ... சனியன் பிடிச்சமழை" என்று அலுத்தவாறே சால்வையால் தலையைத் துடைக்கும் போது நிமிர்ந்த அவரின் பார்வையில் எதிரே எழுந்து மரியாதையுடன் ஒதுங்கி நிற்கும் குமரேசன் தென்பட்டான்.

தலையைத் துடைப்பதை விட்டு அவனைச் சிலகணம் அமைதியாகப் பார்த்தார். விழிகள் மட்டும் கனிந்து கொண்டிருந்தன. அவருக்குக் கனவாய் மறந்துபோயிருந்த பழைய நாட்களின் நினைவுவந்தது. அந்த நினைவையே வெறுப்பவர் போல் சிலிர்த்துக்கொண்டு நிமிர்ந்தார். முளையிலேயே கிள்ளி எறிந்து விட்டோம் என்று நினைத்த செடி, மரமாய் வளர்ந்து எதிரே நிற்பதை உணர்ந்து ஆத்திரம் அடைந்தார்.

பெருகும் ஆத்திரத்துடன் அறையுள் நுழைந்த அவர் அணைத்தபடியே தாயும் மகளும் அழுது கொண்டிருப்பதைக் கண்டார். அசந்து போனார். சுமதி விலகி நின்றாள். அங்கே எரிமலை ஒன்று வெடிக்கப்போவதைத் தாயார் உணர்ந்தாள்.

"என்ன இது ... இங்கே என்ன நாடகம்நடக்குது."- சிவசாமி கத்தினார்.

ஒருவரும் ஒன்றும் பேசவில்லை. அமைதி நிலவியது... வெளியே நின்ற குமரேசன் தான் பதில் சொன்னான்:

"நாடகம் இல்லை ... உண்மை ... வாழ்க்கையின் உண்மையைத்தான் நீங்க கண்ணால பார்க்கிறீங்க ..."

சிவசாமி அவனைப் பார்க்கத் திரும்பினார்.

"ஆமாப்பா, நான் அவரோடுதான் வாழப்போகிறேன்... இன்னும் கொஞ்ச நேரத்திலே என் வாழ்க்கைப் பாதையில் நான் நடக்கப்போகிறேன்..."

அவர் திரும்பினார். சுமதி தைரியமாகத் தன் முன் நிற்பதைக்கண்டார். அவ்வளவு துணிவை அவளுக்குக்கொடுத்தது யார்? நான்கு சுவர்களுக்குள் அடைபட்டு வெம்பி வெம்பிக் கண்ணீர் வடித்த சுமதியா இப்படிப் பேசுகிறாள். அவர் விழிகளை உருட்டி விழித்தார்.

"நான் முன்போலக் குழந்தையில்லை ... என்னை யாரும் வற்புறுத்தவும் முடியாது. நான் ஏமாறவும் மாட்டேன். எனக்குத் தேவையான வாழ்வைத் தேடிக்கொள்ள எனக்கும் வயதுவந்துவிட்டது..."

சிவசாமி அசந்து போய் உணர்ச்சியற்றுக் கேட்டுக் கொண்டு நின்றார்.

"ஆமாம், அவள் வாழ வேண்டியவள்... மனதிற்குப் பிடித்தவனுடன் எங்கே இருந்தாலும் சந்தோஷமாக வாழட்டும்..."

அவர் மனைவியைப் பார்த்தார். இவளுக்கென்ன, கண்களுடன் இதயமும் இருண்டுவிட்டதா? சுமதி எப்படியெல்லாம் வாழவேண்டுமென்று கனவு கண்டோம்... அதையெல்லாம் மறந்துவிட்டாளா...?

"உனக்கென்ன பைத்தியம் பிடித்துவிட்டதா?"

"இல்லை. பிடித்திருந்த பைத்தியம் இப்போதுதான் தெளிந்திருக்கிறது. அவளும் என்னைப்போல பெண். மனதிற்குப் பிடித்தவனோடு வாழ ஆசை இருக்காதா? நான் உங்களுடைய பதவிக்கும் பணத்திற்கும் ஆசைப்பட்டா உங்களுடன் ஓடிவந்தேன். இல்லை... அதுக்கு ஆசை மட்டுமல்ல ... அதற்கும் மேலாக ஒன்று இருக்கிறது... அதுதான் அன்பு. அதுக்கு அடிமைப்பட்டுத்தான் சுமதி அவனுடன்வாழ ஆசைப்படுகிறாள்... அது தவறா?"

சிவசாமிக்கு மனைவியின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் கூர்மையான ஈட்டிகளாய் நெஞ்சுள் பாய்ந்தன. அவருக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. உலகம் அவர் கண்களுக்குச் சுற்றத்தொடங்கியது. பணமும் செல்வாக்கும் அவருக்குப் பெரிதாய்த் தோன்றின. அவர் எப்போதுமே உணர்ச்சிமயமான மனிதர். உணர்ச்சிகளின் கொந்தளிப்பில் காற்றில் இலையாய்க் குதிப்பார் என்பது யாவருக்கும் தெரிந்ததுதான்.

அவர் கத்தினார்.

"அது நடக்காது!"

கத்திய வேகத்தில் அடிபட்ட பாம்பாய்ச் சுருண்டு விழுந்தார். சுமதி அலறினாள்...

தாயார் கட்டிலை விட்டிறங்கி வந்து அவரைத் தன்

[9ம் பக்கம் பார்க்க]

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்:-
பெனியன்கள்
ஸ்போட் சேட்டுகள்
ரி சேட்டுகள்
காலுறைகள்
(Nylon & Cotton)
லேடன் இன்டஸ்றீஸ் லிமிட்டெட்
7, ஆஸ்பத்திரி வீதி, : : யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சனம்

# கொழும்பில் நடைபெற்ற நாடகவிழா

ஐந்து நாடக மன்றத்தினரின் ஐந்து நாடகங்களை தேசிய கலைப்பேரவையினர் செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் அளித்துள்ளனர், சிறு நாடகங்களாயினும் உயர்கருத்துக்களை அவற்றினுள்ளே காணமுடிந்தது.

## நீதியின் நிழல்

(தேசிய கலைப்பேரவையினர்):-

குற்றம் புரிந்த இளைய மகனை தண்டித்துமுதல்புதல்வனின் நீதிக் கூற்றுப்படி ஆளச் சம்மதித்து நீதியின் நிழலாக ஒருவர்- இதுதான் கதை. அரசன், சித்திரசேனன், சிற்பி பாவை ஆகிய பாத்திரங்களில் நடித்த இளம்பூபதி, தாலிப், மில்டன், சந்திரகலா நால்வரும் நயமுறவே நடித்தனர். வீரசேனுவாக நடித்த மீரான் கைகளைக் கட்டிக்கொண்டே காதல் கட்டத்தில் தோன்றி கடுஞ் சொற்பொழிவுகள் நிகழ்த்தினுர்.

## நவீன அசோகன்

(ஏ. நெய்னு குழுவினர்):-

நாடக விழாவின் மகுடம் இதுவாகும். எம். ஜி. ஆர், சரோஜாதேவியின் ஈழ வருகை எவ்வளவுக்கு பல கோணங்களிலும் சென்று திரைக்காற்றைப் பரப்பி விட்டிருக்கிறது என்பதை அப்பட்டமாக நாடகம் உணர்த்தியது.

நவீன அசோகனுக வந்த நெய்னுவுக்கு ரசிகர்களின் பாராட்டுக்கள் பெரும்பகுதி நேரத்தில் கிடைத்தது. சில சந்தர்ப்பங்களிலாவது அவர் ஒரே இடத்தில் நின்று நடித்திருக்கலாம், மேடையிலே ஓடிக்குதிக்காமல். நாடக வெற்றிக்கு அவருடன்அவர் சக நடிகர்களும் துணை நின்றனர்.

## ஒருத்தி சொன்னுள்

(கலைச்செல்வன் புரடக்ஷன்ஸ்):-

சிறீபாமா என்பவளின் அதிகாரத்தில் உரிமைப் போர்-மொழி, குடி உரிமைகள் ளத்தோணி - இத்தியாதி அம்சங்கள். தற்கால அரசியல்நிலைதான் நாடகத்தின் கரு.

உரிமைப்போர் வேட்கை கொண்டகணவன் (பாரூக்), மனைவி (ஜெயகௌரி) இருவரிடமும் காணப்படும் நடிப்பின் முதிர்ச்சியை பிறரிடம் காண முடியவில்லை. சிறிபாமா(ஜெயந்தி) மேடைக்கு புதிசு. வசனங்களையும் மறந்துவிடுகின்ருர். தமிழ்மாறன்-நாடக மேடையிலே பயன்படுத்தக் கூடிய ஒரு நடிகர்.

## பதில்சொல்

(அமரகவி பாரதியார் நாடக மன்றம்)

தொழிலாளி முதலாளி போராட்டம் நாடகத்தின் அடிப்படை. இந்தப்போராட்டத்துக்கு முடிவே கிடையாதா என்னும்படி சற்று நீண்டு அமைந்து நாடகம் ரசனைக்குறைவை அளித்துள்ளது. மேலும் பயிற்சியுடன் தனிப்பட்ட நீண்ட நாடகமாக அமைக்கலாம். இதனுல் சிறப்பாக குறிப்பிடக்கூடிய நடிப்பினையோ காட்சியையோ கூறமுடியவில்லை. மனேஜராகவந்தவர் தன்னை வில்லன் பாத்திரங்களில் வளர்த்துக் கொள்ளலாம்.

## தங்கத்தாய்

(திருப்பாலை நாடக மன்றம்)

அரசகதை- மன்னன்புலிக் கண்ணனை அறியாது தளபதி செய்யும் அக்கிரமத்தை அண்டைநாட்டுத் தளபதி பொற்செழியன் அம்பலப்படுத்துவதோடு வரிசெலுத்தவும் மறுக்கிருன்-நீதிவெல்கிறது. புலிக்கண்ணனுகவும், கறுப்பாயியாகவும் (கலைச்செல்வி) நடித்தவர்களின் நடிப்பைச் சிறப்பாகக் கூற வேண்டும். ஏனைய பாத்திரங்களில் வந்துபோனவர்கள் பாத்திரத்தை உணர்ந்து கொண்டால் அவர்களும் சிறந்த நடிகர்களாவார்கள்.

பொதுவாக ஒப்பனை சிறப்பாக இருந்தது என்பதற்கு சிற்பி, புலிக்கண்ணன், பொற்செழியன் போன்ற பாத்திரங்களை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

பெண் பாத்திரங்களில் நடித்தவர்கள் குறை கூற முடியாது நடித்தமை ஆண்கள் பின்பற்றக்கூடிய ஒரு அம்சமாகும்.

மேடைக்குத் திரை இல்லாதது பெருங்குறைபாட்டைக் காட்டியது.

ஏறக்குறைய எல்லா முஸ்லிம் நடிகர்களுமே தம்மைக் கொழும்பு முஸ்லிம் என்று காட்டாது நல்ல தமிழைப் பேசி, நடிப்பது தமிழ் நாடகம்தான் என்பதை உணர்த்தி சென்றமை யாழ்ப்பாணம், மட்டக்களப்புபேச்சுத் தமிழைவிட வேறுவகையில் நமக்கு நாடகம் நடத்தமுடியாது என்ற பான்மையில் நாடகங்களை, நாடகவிழாக்களை நடாத்தி வருபவர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்; பின்பற்றப்பட வேண்டியதொன்றுமாகும்.

— நவசோதி

### சிறுகதை

(8ம் பக்கத் தொடர்ச்சி)

மடியில் எடுத்துக் கிடத்திக் கொண்டாள். கணவனின் முகத்தை ஒளியற்ற விழிகளால் பார்த்துக் கொண்டே கூறினுள்:

"சுமதி, நீ போயிடு ... எங்கேஇருந்தாலும் மனதிற்குப் பிடிச்சவனேடு சந்தோஷமா இரு ... அப்பா மயக்கம்தெளிந்து எழ முந்திப் போயிடு..."


"அம்மா..."--சுமதி தவித்தாள்.

"சுமதி நீ போ — என் தாலி மேல் சத்தியமாய்ச் சொல்கிறேன், போய்விடு — நாங்க வாழ்ந்து முடிச்சவங்க — நீங்கள் வாழப்போகிறவர்கள்... சருகுக்காகத் துளிரும் சேர்ந்து வாடமுடியுமா —"

இருவரும் தாயிடம்விடைபெற்று அமைதியாய் வெளியே இறங்கி புது வாழ்வை நோக்கி நடந்தனர் —

வானத்தில் மழைமூட்டம் கலைந்து ஒளி துலங்கத் தொடங்கியது.

(யாவும் கற்பனை)




நடக விமர்சனம்

## கண்டி அரசன்

இலங்கைக் கலைக்கழகம் மட்டக்களப்பில் சென்ற மாதம் 29-ம், 30-ம், 31-ம் தேதிகளில் நடாத்திய நாடகவிழாவில் யாழ்ப்பாணம் பாஷையூர் 'வளர்பிறை' நாடக மன்றத்தினர் தயாரித்தளித்த "கண்டி அரசன்" என்றநாடகம் 1965-ம் ஆண்டின் சிறந்த அண்ணுவிமரபு நாடகமாகக் கலைக்கழகத்தால் தெரிவு செய்யப்பட்டது.

நாடகம் தொடங்கிய நேரம்முதல் முடியும் கட்டம் வரையும் அதன் சோபையை இழக்காதது மட்டுமின்றி காட்சிக்குக் காட்சி விறுவிறுப்புடன் போய்க் கொண்டிருந்தமை பாராட்டுக்குரியது. இதனுல் ரசிகர்களின் உள்ளத்தில் நாடகம் நீங்காத இடத்தைப் பெற்றிருந்தது.

கண்டி அரசனுக அ. பாலதாஸ், குமாரியாமியாக ஆசிரியர் ஆரமும் தோன்றித் தங்கள் பாத்திரத்தை மிகத்திறம்பட நடித்து ரசிகர்களின் அபிமானத்தைப் பெற்றுக் கொண்டதுமல்லாமல், நடிப்புக்கலைக்கே இலக்கணம் வகுத்துக் கொண்டனர். இவர்களுடன் ரஞ்சித பூஷணியாக மு. டேவிட்டும் மற்றும் இ. பாபு, அ. டயனீஷியஸ், ஞா. மரியநாயகம், அ. அன்டசன், ஆசிரியர் மகாராஜா ஆகியோரும் நடித்தனர். நடிப்புப் பரவாயில்லை!

ஆறு வயது நிரம்பாத பச்சிளம் பாலகர்களான வெனுன்சியஸ், ராஜ்குமார் ஆகியோரது சோக நடிப்பு உணர்ச்சி நிரம்பிய ஒரு கட்டமாக இருந்தது.

வாத்திய இசையும், காட்சியும் ஒருங்கே சிறப்புற அமையப்பெற்ற 'கண்டி அரசன்' நாடகம் ரசிக்கக் கூடிய ஒரு நல்ல நாடகம் தான்.

--'பதுவைதாசன்'

## சிவாஜிக்கு புதிய பட்டம்

சிவாஜி கணேசனுக்கு ஒரு புதுப்பட்டத்தை சென்னை, வடபழனி சிவாஜி கணேசன் ரசிகர்கள் வழங்கியுள்ளார்கள். அது 'கலையுலக ஜனுதிபதி' என்பது தான். எனவே இனி அவர் 'கலையுலக ஜனுதிபதி சிவாஜி' என்று அழைக்கப்படலாம்.

சிங்களப்படவுலகம்

## சுவையான செய்திகள்

கடந்த 28 ஆண்டுகாலமாக சிங்களப்படங்கள்தயாரிக்கப்பட்டு வருகின்றன. இலங்கையின் முதல் சிங்களப் படம்-'கடவுனபொருந்துவ.' (இழந்த காதல்). 1947-ல் இப்படம் வெளியாகியது. முதல் சிங்கள கலர்ப் படம்-செரண்டிப் புரொடக்ஷன்ஸாரின் 'ரன்முத்துவ' இதுவரை 102சிங்களப்படங்கள் வெளியாகியுள்ளன.

○ இலங்கையில் சிங்களப் படங்களை அதிகமாகத் தமிழர்கள் தயாரிக்கிருர்கள் -ரெவின் தம்பு, இராமநாதன், சோமசேகரம் ஆகியோர். பிரபல இசையமைப்பாளராக விளங்குபவரும் முத்துசாமி என்ற தமிழர் தான்.

○ இலங்கையில் தயாரிக்கப்பட்ட சிங்களப் படம் ஒன்று ரஷ்ய படவிழாவில் கலந்துகொண்டதென்ருல் ஆச்சரியமாகத்தான் இருக்கும். சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தார் தயாரித்த 'சந்தேசயா' என்ற படம் தான்இப்புகழைப்பெற்றது.

○ கூடிய'ரேட்' ஆன25,000 ரூபாவை ஒரு படத்தில் நடிப்பதற்காக வாங்குபவர் நடிகர் காமினி பொன்சேகா என்பவர்தான்.

○ அண்மையில் முதல்முதலாகசிங்களப்படமொன்றை ஒரு டெண்மணி டைரக்ட் செய்து ஒரு சாதனையை இலங்கை சிங்களப் படவுலகில் நாட்டினுர். அவர்தான் கவர்ச்சி நடிகைபுளோறிடா ஜெயலத்.

# தயாராகும் புதிய படங்கள்

## 'புது உறவு'

ஆனந்தனைக் கதாநாயகனுக நடிக்க வைத்து, 'புது உறவு' என்ற ஒரு புதுமையான படத்தைத் தயாரிக்கிருர்கள், புதியபடக்கம்பனிக்காரரான சாந்தா மூவிசார், எம். எஸ். பி. சாரதி டைரக்ட்செய்யும் இப்படத்தில் புதுமுகம் ஜெய்கிருஷ்ணன், ராஜஸ்ரீ, சாரதா ஆகியோர் நடிக்கின்றனர்.

## 'பக்த கௌரி'

'பணம் தந்த பரிசு' படத்தை தயாரித்த 'சூர்யா பிலிம்சார்' 'பக்த கௌரி' என்ற படத்தை தயாரிக்கிருர்கள். 25 ஆண்டுகளுக்கு முன்னர் பழம்பெரும் நடிகர் யு. ஆர். ஜீவரெத்தினம் நடித்த படம்தான் இது என்பது குறிப்பிடத்தக்கது.

திரைக்கதை வசனத்தை கலைமணி எழுதியிருக்கிருர். என். எஸ். வர்மா டைரக்ட் செய்யும் இப்படத்தில் புதுமுகங்கள் ராமசாமி, வரதன் லட்சுமி ஆகியோர் நடிக்கிருர்கள்.

REGAL—JAFFNA
NOW SHOWING
Nancy Kwan
John Fraser
IN
TAMAHINE
(Cinemascope & Metrocolor)

இப்பொழுது திரையிடப்படுகிறது!
ராஜா (யாழ்ப்பாணம்) ஜெஸிமா (கிருன்பாஸ்)
தினசரி 2-30, 6-30, 9-45.
சனி-ஞாயிறு 10-30, 2-30, 6-30, 9-45.
தத்தி தத்தி நடந்துவரும் தங்கப் பாப்பா
இத்தனைநாள் எங்கிருந்தாய் சொல்லு பாப்பா?
இதோ வந்துவிட்டேன் ராஜா திரைக்கு
அம்மா - அப்பா அனைவரையும் அழைத்து வாரீர்!
எஸ். பாலச்சந்தர் – எல். விஜயலக்ஷ்மி
மற்றும் பலர் திறம்பட நடித்த
SB க்ரியேஷன்ஸ்
பொம்மை
தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடி
வெற்றிவாகை சூடிய திரைக்காவியம்!
உங்கள் பல்கனி ஆசனங்களை முன்கூட்டியே
பதிவு செய்துகொள்ளுங்கள்!

7-வது வெற்றி வாரம்!
கிங்ஸலி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜிதா (ஹட்டன்) கல்யாணி (நாவலப்பிட்டி) லக்ஷ்மி (இரத்தினபுரி) சந்தியா (கம்பளை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2 6, 9-30 மணிக்கு
தென்னுட்டில் 30 வாரங்களுக்குமேல் ஓடி திரைப்பட வரலாற்றில் புதிய சாதனையை ஏற்படுத்தியிருக்கும் மகத்தான வெற்றிச் சித்திரம்!
எம். ஜி ஆர். — சரோஜாதேவி
(இருவேடங்களில்)
ரங்கராவ், நம்பியார், தங்கவேலு, ரத்னு, பண்டரிபாய், நாகேஷ், மாதவி, விஜயலக்ஷ்மி
நடித்த

விஜயா கம்பைன்ஸ்
எங்கவீட்டுப் பிள்ளை
(ஈஸ்மென்கலர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஆலயத்திருப்பணி வேலைகளில் ஈடுபட முன்வாருங்கள்"

## இளைஞர்களுக்கு கோரிக்கை

உடுப்பிட்டி, சனி

''ஆலயத் தொண்டுகளைப் பற்றிச் சைவ அடியார்களும், சமயக் குரவர்களும் ஆறுமுகநாவலரும் கூறிச் சென்ற பின்பு இக்காலத்தில் ஆலயத் தொண்டில் பொதுமக்களின் ஈடுபாடு மிகவும் குறைந்துவிட்டது. சிரமதானம் என்ற போர்வையில் வீதிகளையும், வேலிகளையும் திருத்தும் இளைஞர்கள் ஆலயத்திருப்பணி வேலைகளில் ஈடுபட முன்வாருங்களென்று கூறினால் வரத்தயங்குகிறார்கள். ஆலயங்களில் தொண்டு செய்ய இளைஞர்கள் வெட்கப்படுகிறார்கள். நமது சமயத்தையும், கலாச்சாரத்தையும் நாமாகவே வெறுத்து ஒதுக்கினால் வேறு யார்வந்து அவற்றைப் பாதுகாப்பார்கள்? அரசியலிலும், சினிமாக்களிலும், நடிகர்களை வரவேற்பதிலும் நம் மக்கள் காட்டும்ஈடுபாட்டில், எள்ளளவாவது ஆலயத்திருப்பணிகளில் காட்டுகிறார்களில்லை. இது மிகவும் வேதனைக்குரிய செயலாகும்.''

இவ்வாறு வரணி மாசேரியூர் பொற்பத்தங்கேணி (நாவலடி) வீரகத்திப்பிள்ளையார் கோவில் திருப்பணிச் சபைக் கூட்டத்தில் திரு. சி. சிவபாதசுந்தரம் பேசுகையில் கூறினார்.

திரு. சோ. சிதம்பரநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. சிவபாதசுந்தரம் தொடர்ந்து கூறியதாவது: வீண் ஆடம்பரங்களுக்காகச் செலவழிக்கும் பணத்தில் ஒரு சிறு பகுதியை ஒதுக்கி நமது ஆலயத்திருப்பணிக்கு உதவ முன்வரவேண்டும். தமிழ் நாட்டிலுள்ள ஆலயங்களைப் போலக் கோபுரவேலைகள் செய்யமுடியாவிட்டாலும் நமது வலுவுக்கேற்ற திருப்பணி வேலைகளையாவது செய்யவேண்டும்.

திருவாளர்கள்: க. கிருஷ்ணசாமி, மு. ஜெயவீரசிங்கம், சோழங்கச் சேனாதிராசா ஆகியோரும் பேசினர்.

## "இலக்கியப் புரட்சி ஏற்படவேண்டும்"

உடுப்பிட்டி, சனி

''இக்காலத்தில் தமிழ் மாணவர்களிடையே ஓர் புரட்சி தோன்றவேண்டும். இரத்தம் சிந்தியோ அல்லது கண்ணீர் சிந்தியோ இப்புரட்சி ஏற்படவேண்டியதல்ல இது ஓர் இலக்கியப் புரட்சி. இதனை புராண இலக்கியங்களைக் கொண்டு சாதிக்க முடியாது.

இவ்வாறு புலவர் தமிழ் மாறன் கொக்குவிலில் உள்ள யாழ். கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் இலக்கிய மன்றத்தில் ''புராண இலக்கியங்கள்'' பற்றி பேசுகையில் கூறினார்.

இக்கூட்டத்துக்கு திரு. கே. மகேந்திரா தலைமை வகித்தார்.

## யாருடையது?

யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதியில் ஒரு திறப்பு கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சியுடன் பெற்றுக்கொள்ளலாம்.

## "பொருளாதாரத்தில் சுதந்திரம் வேண்டும்"

மாவிட்டபுரம், சனி

''எங்கள்தேசம் சுதந்திரம் பெறுவதற்கு போராடவில்லை. இரத்தம் சிந்தவில்லை. ஆனதினால் இலங்கையின் சுதந்திரம் இன்னும் நிறைவுபெறவில்லை. பொருளாதாரத்துறையிலும் சமய கலாசாரத் துறையிலும் என்று நாம்சுதந்திரம் பெறுகிறோமோ அப்போதுதான் எமது நாட்டின் சுதந்திரம் பூர்த்தியானது எனக் கருதமுடியும்'' என்று வலிவடக்கு காரியாதிகாரி திரு. டி. முருகேசம்பிள்ளை அளவெட்டியில் சிரமதானமூலம் மாணவர்கள் களைபிடுங்கும் வைபவத்தைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் கூறினார்.

அளவெட்டி பிணுக்கை கமவெளியில் நடைபெற்ற களைபிடுங்கும் வைபவத்தில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி, சதானந்த வித்தியாலயம், அருணாசல வித்தியாசாலை என்பனவற்றைச் சேர்ந்த ஆயிரம் மாணவர்கள் பங்குபற்றினர். காரியாதிகாரி தொடர்ந்து பேசுகையில் 'சிரமதான இயக்கத்தில் பங்குபற்றும் ஒவ்வொருவரும் இலங்கையின் சுதந்திரப் போர்வீரர்கள்' என்பதனை உணரவேண்டும்' எனக் குறிப்பிட்டார்.

## திருமண அழைப்பு

தொல்புரம் திரு. எஸ். பரமலிங்கம் (இளைப்பாறிய ஸ்ரேஷன்மாஸ்டர்), திருமதி பரமலிங்கத்தின் மகனாகிய சரசானந்தராசா (உப தபாலதிகாரி, தொல்புரம்) அவர்களுக்கும், தொல்புரம் வைரவநாதன் தம்பதிகளின் புத்திரி நாகேஸ்வரிக்கும் 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 8-ம் திகதி பிற்பகல் 1 மணி 30 நிமிஷமளவில் பொன்னாலை கிருஷ்ணன் கோவிலில் இந்து முறைப்படி விவாகம் நடைபெறும். தனிப்பட்ட அழைப்பிதழ்கள் அனுப்பவில்லை. உறவினர்களும், நண்பர்களும் இதையே அழைப்பிதழாக ஏற்றுக்கொள்ளவும். ராஜா வாசா, தொல்புரம், சுழிபுரம். 1457

## திருமண அழைப்பு

### பொன்னம்பலம்—பேரம்பலம்

புகையிரதப்பகுதிக் கணக்காளர் த. பொன்னம்பலம், திருமதி பொன்னம்பலம் ஆகியோர்களின் புத்திரி பத்மாசனிக்கும், ஏழாலை மேற்கைச் சேர்ந்த திரு, பேரம்பலம் தம்பதிகளின் புத்திரன் பாலசுப்பிரமணியத்திற்கும் நிகழும் விசுவாவசு வருடம் கார்த்திகை மாதம் 23-ம் திகதி புதன்கிழமை (8-12-65) பிற்பகல் 1-00 மணிக்கும் 2-30 மணிக்குமிடையில் நல்லூர் சிவன் கோவிலில் வைத்து திருமணஞ்செய்ய நிச்சயித்திருப்பதால், அவ்வைபவத்தில் கலந்துகொள்ளும்படி உறவினர்களையும் நண்பர்களையும் இவ்வறிவித்தல் மூலம் அழைக்கின்றோம். த. பொன்னம்பலமும் பாரியாரும், திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். 1456

## வாடகைக்கு

ஐந்து அறைகள், ஹோல், விருந்தை, சமையல் அறை, தண்ணீர், மலகூடம் மற்றும் நவீன வசதிகளுடன் மேல் மாடி கன்னாதிட்டியில் வாடகைக்குஉண்டு. எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 1451, C/o ஈழநாடு. 1451

## மகா த்தியாலய பெற்றோர் தின ழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

''ஒரு பாடசாலையின் கணிப்பும் வளர்ச்சியும் அப்பாடசாலைப் பெற்றோரின் ஆதரவிலும் ஒத்துழைப்பிலுமே தங்கியுள்ளன'' என்று யாழ்ப்பாணம் சென் ஜேம்ஸ் மகாவித்தியாலய அதிபர் பண்டிதர் க. யோ. ஆசிநாதர் நேற்று முன் தினம் நடைபெற்றபெற்றோர் தின விழாவிற்கூறினார்.

பெற்றோர் தினவைபவங்கள், யாழ். மாநகரசபை உறுப்பினர் திரு. எம். எஸ். பேரின்பநாயகம் தலைமையில் நடைபெற்றன. அவர் தம் தலைமை உரையில், பெற்றோர் தம் பிள்ளைகள் விஷயத்தில் அக்கறை கொண்டு பாடசாலைக்குப் பலவிதத்திலும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

அதிபர் தம் அறிக்கை உரையில் பாடசாலைத் தேவைகள் பற்றிக் குறிப்பிட்டு வரும் ஆண்டில் பெற்றோர் பாடசாலை வளர்ச்சியில் அதிகமான ஆதரவு காட்டவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். மாணவர்களின் கதம்ப நிகழ்ச்சிகள் திறம்பட நடைபெற்றன. இறுதியில் பரிசில்கள் வழங்கப்பட்டன. பண்டிதர் செ. செல்வரத்தினம் நன்றி கூறினார்.

காங்கேசன்துறை

## பட்டினசபை தேர்தல் சனிக்கிழமை நடைபெறும்

மாவிட்டபுரம், சனி

காங்கேசன்துறை பட்டினசபைத் தேர்தல் இம்மாதம் பதினோராம் திகதி நடைபெறவிருக்கிறது.

இம்முறை தேர்தலில் ஆறு வட்டாரங்களில் பதினைந்து பேர் போட்டியிடுகின்றனர்.

புதிய தேர்தல் சட்டங்களுக்கமைய இத்தேர்தல் நடைபெறுகிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

பட்டினசபைத் தேர்தல் பிரசாரங்கள் உச்சக்கட்டத்தை அடைந்திருக்கிறது. அசம்பாவிதமான சம்பவங்கள் எதுவும் நிகழாவண்ணம் பொலிசார் பல முன்னேடி நடவடிக்கைகளைமேற்கொண்டுள்ளனர்.

## திருத்தம்

நேற்றைய 'ஈழநாடு' 6-ம் பக்கத்தில் வெளியான 'மின்சார தாக்குதலினால்' என்ற செய்தியில் யாழ்ப்பாணப் பகுதியில் ஏற்பட்டுவரும் மின்சாரத் தாக்குதலுக்கு ஐந்தாவது நபராக என்று வெளியானது தவறு. யாழ்ப்பாண நகரஎல்லைக்குள் இரண்டு நபர்களே மின்சாரத் தாக்குதலுக்குப் பலியாகி இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## விற்பனவு . .

1-ம் பக்கத் தொடர்ச்சி

நஷ்டமின்றி விற்பனைசெய்ய முடிகிறது. இப்பகுதி விவசாயிகளை ஊக்குவித்து உபஉணவுப்பொருள்களின் உற்பத்தியை அதிகரிக்கவும் இத்திட்டம் உதவி புரிகிறதென்றும் திரு. ரி. சிவசிதம்பரம் கூறினார்.

அங்குரார்ப்பண வைபவத்தில் விற்பனை அபிவிருத்திப்பகுதி உதவிக் கமிஷனர் திரு. ஜோசப்பும் கலந்து கொண்டார்.

ஏராளமான விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த பல்வேறு வகையான பொருள்களை சந்தைக்குக் கொண்டுவந்திருந்தனர். இப்பொருட்களை வாங்குவதற்காக ஐந்து லொறிகள் வந்திருந்தன. இந்தச் சந்தையில் ஒவ்வொருசனிக்கிழமையும் [illegible] நேரடியாக வாங்கிக்கொள்ளும்

ரொடீஷிய விவகாரம்

# ஆபிரிக்க நாடுகளின் உறவுகள் முறியும்

## பிரிட்டனுக்கு ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனம் எச்சரிக்கை

அடிஸ்அபாபா, டிச. 4

ஸ்மித் அரசாங்கத்தை நசுக்க ரொடீஷியா மீது பிரிட்டன் நேரடி நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறுமானால் பிரிட்டனுடனான பொருளாதார வர்த்தகத்தொடர்புகளை ஆபிரிக்க நாடுகள் துண்டித்துவிடுமென்று இங்கு கூடிய ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனம் முடிவு செய்துள்ளது.

ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்தின் வெளிநாட்டு மந்திரிகள் நேற்று இங்கு கூடி ரொடீஷியா சம்பந்தமாக விவாதித்தனர். இந்த மகாநாட்டில் 36நாடுகள் கலந்து கொண்டன.

ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்தின் தீர்மானங்களை ஸ்தாபனத்தின் பொதுக்காரியதரிசி வெளியிட்டார்.

இம்மாதம் பதினைந்தாம் திகதிக்குள் ஸ்மித்தின் அரசாங்கத்தை நசுக்க பிரிட்டன் தவறுமானால் பிரிட்டனுடனான உறவுகளை ஆபிரிக்க நாடுகள் துண்டித்துவிடும் என்றும் அவர் எச்சரிக்கை செய்தார்.

ஜிந்தோட்ட

## ஒட்டுப்பலகை தொழிற்சாலை ஊழியர்கள் வேலைநிறுத்தம்

காலி, சனி

ஜிந்தோட்ட ஒட்டுப்பலகைத் தொழிற்சாலை ஊழியர்களின் வேலை நிறுத்தம் நீடித்துவருகிறது. இன்று இவர்கள் ஐந்தாவதுநாளாக வேலைநிறுத்தம் செய்தனர்.

தொழிற்சாலையைச் சேர்ந்த 800 பேர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களில்எட்டு தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது


போனஸ் சம்பந்தமான ஒரு கோரிக்கையைத் தொடர்ந்தே இவர்கள் வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர்.

வேலைநிறுத்தம் சம்பந்தமாக நேற்று தொழிற்சாலை அருகே நடைபெற்ற கூட்டமொன்றில் தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்வதென்று முடிவுசெய்யப்பட்டது.


ஒரு பிரபலமான டுப்பிளிகேட்டறின்
பிரபலமான மொடல்
சகாயமானவிலைக்கு உண்டு

M2

REX-ROTARY



எம்2 — விசேஷ அம்சங்கள்

காகிதங்கள் வைக்கும் பெட்டியில் 250 காகிதங்கள் வைக்கலாம். தபால் அட்டையிலிருந்து முழு அளவுக் காகிதம் வரையான எந்த அளவுள்ள காகிதத்திலும் பிரதிகள் எடுக்கலாம்.

உயரம், ஓரம் ஆகிய நிர்ணயங்களை இலகுவில் செய்யலாம். விரும்பிய விதத்தில் ஒழுங்கு செய்யக்கூடியது. ஸ்டென்சில் வெட்டுகள் செய்யக்கூடிய வகையில் சரி செய்யலாம்.

கௌண்டரில் நான்கு இலக்கங்கள் உண்டு. விரும்பினால், ஒற்றைக் கணக்கை மாற்றி சைபர் ஆக்கக்கூடிய வசதியும் செய்யப்பட்டுள்ளது. இது எடுக்கும் பிரதிகளின் எண்ணிக்கையைச் சரியாகக்கணக்கிடுகிறது. இயந்திரம் இயங்காதிருக்கும்போது டிராமின் சுழற்சிமுறை மாற்றுப் பொறி சுழற்சி எண்ணிக்கைகளை இது கணக்கிடுவதில்லை.

இத்தனை சிறப்பு வாய்ந்த அம்சங்களுடன் கூடிய எம்—2 இன் விலை குறைவானதே. பாவிக்கும்போதும் அதிக செலவு ஏற்படுவதில்லை. இதனால்தான் எம்—2 இன் விலைக்கு அது விரைவில் நல்ல சேவைபுரிகிறது.

எம்—2 மாற்றிய இன்னும் அதிகம் கூறலாம், உங்களுக்குக் கஷ்டமின்றி எவ்வளவுதூரம் அது சேவை செய்யும் என்பதை நீங்கள் அறிய வேண்டும். தொலைபேசி மூலம் அல்லது கடிதம் மூலம் எம்முடன் தொடர்புகொண்டால், எம்—2 வேலை செய்யும் விதத்தை உங்களுக்கு உங்கள் காரியாலயத்திலேயே காண்பிப்பதில் மகிழ்ச்சியடைவோம்.

விரைவில் இறக்குமதி செய்யப்படவிருக்கிறது.

ஆபீஸ் இக்கியுப்மெண்ட் லிமிட்டெட்
(OFFICE EQUIPMENT LTD.)

தொலைபேசி: 6168
தந்தி: ஆபீஸ் எமிட்ஸ்

ஐலண்ட் கட்டிடம்,
கொழும்பு - 3


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி: 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5ம் திகதி அச்சிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org